தென்றல் முல்லை

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க வெளியீடு

Thenral Mullai

A Publication of Tamil Sangam of Greater Washington Inc.

திருவள்ளுவர் ஆண்டு - 2057 | அக்டோபர் 2026 மலர்: 23 இதழ் : 15



உள்ளே...

வாசகர் குரல்: சென்ற இதழ் பற்றிய பார்வை	06
இது சுட்டிகளின் பக்கம்	09
அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 39-வது தமிழ் விழா - எனது அனுபவங்கள்	10
அறிவோம்! தெரிவோம்!	11
சொல் விளையாட்டு	12
இமயமலையில் பெரும் வெள்ளம்	13
கவினும், அம்மாவும்: உணவே மருந்து	14
வெளிச்சம்: மரபு இசைக்கருவிகள் மற்றும் விளையாட்டுகள்	15
குழந்தைகளின் ஓவியங்கள்	18
எங்கள் கோடை விடுமுறை	21
ஆறு வித்தியாசங்கள்	22
இளம் சாதனையாளர் பக்கம்	30
அறம் என்றால் என்ன?	32
வரலாற்றின் பாதையில் ஒரு பயணம்	33
மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகத்தின் 16-வது ஆண்டு விழா	34
கலையும் இசையும் உற்சாகமும் சங்கமித்த முத்தமிழ் விழா 2026	38
படைப்பும், படைப்பாளியும்...	40
சங்க இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்வு: சிறப்புப் பார்வை	45
பாலாவின் குறுங் கவிதைகள்	45
பெண்மை... பெருமை....	46
சமீபத்திய திரைப்படங்கள்: ஒரு சிறப்புப்பார்வை	48


குழந்தைகள் நாள் விழா வாழ்த்துகள்



Balagan Business & Tax Service



Balagan Business & Tax Services can provide you with assistance in all your tax, financial, and business affairs - assistance that will improve your total financial well-being.



We want you to get the best financial and tax help possible. If you have a question which is not addressed here, please contact us via

e-mail: questions@balaganfinancials.com

or by phone:

(301) 931-1040/ (703) 723-9471

Please visit our website for more information:

http://balaganfinancials.com/mobile/

தமிழ்ச்சங்கச் செயற்குழு 2026

தலைவர்
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்

துணைத்தலைவர்
திரு. சீனிவாசன் சண்முகம்

செயலாளர்
திரு. அறிவுடை நம்பி புகழேந்தி

துணைச் செயலாளர்
திரு. பாலாஜி துரைசாமி

பொருளாளர்
திருமதி காமேஷ்வரி சந்திரசேகர்

துணைப் பொருளாளர்
திருமதி அன்னபூரணி அருணாசலம்

செயற்குழு இயக்குநர்கள்
திரு. கொழந்தவேல் இராமசாமி
திரு. எழில்வாணன் கலைவாணன்
திருமதி தீபா செந்தில்நாத்
திரு. பிரகாஷ் மாதேஷ்
செல்வி சுபஸ்ரீ சுசீந்தரன்
செல்வன் அஸ்வின் பாபுவிநாயகம்
திரு. மோகன்ராஜ் அண்ணாமலை

தலைவர் உரை



அன்புள்ள தமிழுறவுகளே,

நம் மரபுமிக்க வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்தின் 2026-ஆம் ஆண்டிற்கான செயற்குழுவின் சார்பாக அனைத்து தமிழுறவுகளுக்கும் பணிவான வணக்கங்கள்.

நம் அன்னைத் தமிழை பெருமைப்படுத்திக் கொண்டாடி மகிழவே முத்தமிழ் விழா. இயல், இசை, நாடகம் என நமது முன்னோர்கள் முப்பிரிவுகளாக பிரித்து தமிழ் மொழியை வளர்த்ததுபோல் நாமும் இந்த மூன்று சுவைகளில் பல்வேறு நிகழ்ச்சிகளை வழங்கி முத்தமிழ் விழாவைக் கொண்டாடி வருகிறோம். இந்த ஆண்டும் நம் சங்கத்தின் சார்பில் முத்தமிழ் விழா சிறப்பாக நடந்தேறியது. சிறப்பு விருந்தினராக கலைமாமணி திரு. இரமணன் அவர்கள் கண்ணதாசனின் புகழ்க் கவி பாட மாலையில் இன்னிசைக் கச்சேரியும் நிகழ்வைச் சிறப்பித்தது. இலக்கியச் சொற்பொழிவுகளும் தொடர்ச்சியாக நடைபெற்று வருகிறது. அடுத்து, நம் வாசிங்டன் வட்டாரப் பகுதிகளில் உள்ள அனைத்து பள்ளிகளுக்கும் சிறப்பு அழைப்பாளராகச் செயற்குழு உறுப்பினர்களோடு சென்று ஆண்டு விழா மற்றும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டது நமது தமிழர்களின் ஒற்றுமையைப் பறைசாற்றியது. அனைத்து பள்ளிகளிலும் குழந்தைகள், ஆசிரியர்கள் மற்றும் தன்னார்வலர்களின் அர்ப்பணிப்பைக் கண்கூடாகக் கண்டு வியந்தோம். இன்னும் பல நூறு தலைமுறைக்கு நம் தமிழ்மொழி மேலோங்கி நிற்கும் என்றால் அது

பொறுப்புத் துறப்பு: புலம் பெயர்ந்த தமிழர்களின், தமிழ் ஆர்வலர்களின் தமிழ் மீது உள்ள ஆர்வத்தை ஊக்குவிக்கும் பொருட்டு, அவர்களின் படைப்புகள் தென்றல் முல்லை இதழில் வெளியிடப் படுகின்றன. ஆகவே, இந்த இதழில் வந்துள்ள படைப்புகளின் கருத்துகள் யாவும் படைப்பாளிகளின் கருத்துகள் ஆகும். எனவே, அந்தக் கருத்துகளுக்கு வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கமோ அல்லது தென்றல் முல்லை ஆசிரியர் குழுவோ பொறுப்பேற்க இயலாது.

Disclaimer: The views and opinions expressed in articles published in ThenRal Mullai are those of the authors and do not necessarily reflect the official policy or position of Tamil Sangam of Greater Washington Inc or ThenRal Mullai editorial board.

மிகையாகாது. கூடவே கோடைக் கொண்டாட்டமும் நம் சங்கத்தின் உறுப்பினர்களோடு ஆனந்தமாய்க் கொண்டாடப்பட்டது.

நம் தமிழ்ச்சங்கம் அடுத்தத் தலைமுறைக்குத் தமிழைக் கொண்டுசேர்ப்பதில் அனைத்து விதமான முன்னெடுப்புகளையும் செய்து வருகிறது. அனைத்து நிகழ்வுகளிலும் குழந்தைகளின் பங்களிப்பு மேலோங்கி இருப்பதே இதற்குச் சான்று. வரும் காலங்களில் குழந்தைகள் மற்றும் இளையோர்களின் பங்களிப்போடு தமிழ்ச்சங்கத்தை முன்னெடுத்துச் செல்வதே நம் தலையாய நோக்கமாகும். இதுவே நமது தமிழ்ச்சங்கத்தையும், நம் தாய்மொழியையும் என்றும் இளமையாக வைத்திருக்க உதவும்.

வாழ்க தமிழ் ! வளர்க நம் ஒற்றுமை !!

இது நமது தமிழ்ச்சங்கம்! நாம் அனைவரும் அதன் அங்கம்!!
வாழ்க தமிழ்! வளர்க நம் ஒற்றுமை!!

நன்றி வணக்கம்! அன்புடன்,

செந்தில் மலைக்கொழுந்து குமார்

செந்தில் மலைக்கொழுந்து குமார்

தலைவர், வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம்

Email: president@washingtontamilsangam.org

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கத்துடன் தொடர்ந்து இணைந்திருங்கள்...

சமூக ஊடகத்தில் உள்ளவர்கள் நம் வாசிங்டன் தமிழ்ச்சங்கத்தின் தமிழ்ச்சங்க முகநூல் (FACEBOOK)/ புலனம் (WHATSAPP) குழுமத்தில் இணைந்திருங்கள். நம் செய்திகளை உங்கள் நண்பர்களுக்கும் பகிருங்கள்.

இணையத்தளம் : WWW.WASHINGTONTAMILSANGAM.ORG
யூடுப் சேனல் : HTTPS://YOUTUBE.COM/C/TSGWTAMILSANGAM
மின்னஞ்சல் : INFO@WASHINGTONTAMILSANGAM.ORG

Instagram TSGWDC | WhatsApp | Social Media QR Code Connect with Us

Tamil Sangam of Greater Washington Inc.

தென்றல் முல்லை ஆசிரியர்க்குழு 2026

முதன்மை ஆசிரியர்:
முனைவர் பாலா குப்புசாமி

இணை ஆசிரியர்கள்:
திருமதி விஜயா சிவப்பிரகாசம்
திருமதி ரஹீமா அலாவுதீன்
திருமதி அனிதா மதனகுரு
திருமதி அபிநயா மோகன்குமார்
திரு. கமலபாரதி பச்சியப்பன்
திரு. மோகன்ராஜ் பாலசுப்ரமணியன்
திருமதி மோனிகா ஜெரால்டு
திருமதி பானு கணேஷ்
திருமதி புவனேஸ்வரி இராஜேஷ்குமார்

இளம் துணை ஆசிரியர்கள்:
செல்வி இலக்கியா பாலமுருகன்
செல்வன் ரக்க்ஷன் சீனிவாசன்
செல்வி கீர்த்தனா கணேஷ்
செல்வி தியா கமலபாரதி
செல்வி சாதனா திலக்
செல்வன் விநாயக் பாபு கணேஷ்
செல்வன் சூர்யா அறிவுமணி
செல்வி ரோஷினி செல்வம்
செல்வி ஆராதனா அருண்
செல்வி மான்சி சந்திரசேகரன்
செல்வி இனயா நிசாமுதீன்
செல்வி இனியா எழில் வடிவன்

சிறப்பாசிரியர்கள்:
திரு. நாஞ்சில் இ பீற்றர்
முனைவர் மீனாட்சி சந்திரசேகரன்
திரு. இளவழுதி வீரராசு
திருமதி சுமித்ரா பாபு கணேஷ்

செயற்குழு தொடர்பாளர்கள்:
திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார்
திரு. அறிவுடை நம்பி புகழேந்தி
திரு. பாலாஜி துரைசாமி

முன் அட்டைப்பட ஓவியம்:
ஸ்வேதா ஜனார்த்தனன், ஹாசினி விஸ்வசாரதி, சம்யுக்தா அஜித், கபிலன் தினேஷ்குமார்

இதழ் அச்சீடு நன்கொடை:
இதழ் அச்சீடு நன்கொடை:
மினிட்மேன் அச்சகம், விர்ஜீனியா.

வடிவமைப்பு
திரு. இசக்கி, esakki2006@gmail.com
+91 9710755689, +91 9962505384

ஆசிரியர் உரை

தாயிற் சிறந்ததோர் கோயிலுமில்லை!
என்னுயிர்த் தமிழே!
உன்னை விட இலக்கிய வளங்களில் நிறைந்தது எம்மொழியுமில்லை!
தமிழன்னைக்கும், தமிழுறவுகளுக்கும் வணக்கம்!

கோடை விடுமுறையை அனைவரும் மகிழ்ச்சியுடன் கொண்டாடி இருப்பீர்கள். நம் வட்டாரக் குழந்தைகளின் சாதனைகளை அங்கீகரிக்கும் மற்றும் ஊக்கப்படுத்தும் வகையில் "இளம் சாதனையாளர் பக்கம்" எனும் பகுதி. உங்கள் குழந்தைகளோ அல்லது உங்களுக்குத் தெரிந்த குழந்தைகளோ மாவட்ட அல்லது மாகாண அளவில் ஏதேனும் ஒரு துறையில் சிறந்து இருப்பின் எங்களுக்கு உரிய தகவல்களோடு தெரிவியுங்கள். தென்றல் முல்லை இளம் ஆசிரியர்க்குழு அவர்களைத் தொடர்பு கொண்டு அவர்தம் நேர்காணலுக்கு வழி வகுக்கப்படும்.

குழந்தைகள் நாள் விழா இதழ் இளம் எழுத்தாளர்களின் ஆக்கத்தாலும் சிந்தனையாலும், சுட்டிகளின் அருமையான படைப்புகளினாலும், மிகச் சிறப்பாய் வந்துள்ளது. இவ்விதழின் 48 பக்கங்களில் 60 சதவீதப் பங்களிப்பு நம் சுட்டிகள் என்பதைப் பெருமையோடு பறைசாற்றுகிறேன். இனி வரும் காலங்களில் இது அதிகரிக்கும் என்பதில் ஐயமில்லை. குழந்தைகள் என்றாலே குதூகலம் தான். குழந்தைகள் என்றவுடன் நான் எழுதிய ஹைக்கூ குறுங்கவிதை ஒன்று நினைவுக்கு வருகிறது.

அடிக்கடி தோல்வியடைவதும்
மனமகிழ்வே
என் குழந்தையிடம்...

உண்மை தானே, குழந்தைகளை மகிழ்விக்க நாம் தோற்பது போல நடிக்கத்தானே செய்கிறோம். இது அனைவர்க்கும் பொருந்தும் என்றே எண்ணுகிறேன். அனைத்துக் குழந்தைச் செல்வங்களுக்கும், குழந்தைகள் நாள் நல்வாழ்த்துகள்.

பல்சுவை இதழாய் இவ்விதழையும் தந்துள்ளோம், உங்களின் கருத்துகளை எங்களுக்குத் தெரிவியுங்கள். “வாசகர் குரல்” பகுதியில் உங்கள் கருத்துகள் அடுத்த இதழில் பிரசுரிக்கப்படும். இதழை சிறப்பாகக் கொண்டு வர உழைத்த தென்றல் முல்லை சக ஆசிரிய நண்பர்களுக்கும், சிறப்பான படைப்புகளைத் தந்த படைப்பாளிகளுக்கும் என் நன்றிகள். தொடர்ந்து உங்களின் சிந்தனைகள், படைப்புகள் மற்றும் கருத்துகளை thenral.mullai@gmail.com எனும் மின்னஞ்சலுக்கு அனுப்புமாறு பணிவுடன் கேட்டுக் கொள்கிறேன். நமது தென்றல் முல்லை இதழுக்கு தொடர்ந்து ஆதரவு தந்து வரும் நமது வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்க உறுப்பினர்கள், கொடையாளர்கள், விளம்பரதாரர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு எங்கள் தென்றல் முல்லை ஆசிரியர்க் குழுவின் சார்பாக மனமார்ந்த நன்றிகள்.



கவின்மிகு தமிழின் புகழ் தரணியெங்கும் பரவட்டும்!
மனிதம் தழைக்கட்டும்!
மீண்டும் அடுத்த இதழில் உங்களோடு பேசுகிறேன்.
தோழமையுடன்...

பாலா...

முனைவர் பாலா குப்புசாமி
முதன்மை ஆசிரியர்



வாசகர் குரல்: சென்ற இதழ் பற்றிய பார்வை

திருமதி தனலட்சுமி சாம்பமூர்த்தி


தமிழ் மொழி நமது அடையாளம்! மொழி வளர வேண்டுமெனில் நாம் நமது மொழியை அடுத்த தலைமுறைக்குக் கொண்டு சேர்க்க வேண்டும். வட அமெரிக்காவில் வாழும் நாம் நம் குழந்தைகளுக்கு நம் தாய் மொழியான தமிழைக் கற்றுத் தர, மற்றும் அதன் சிறப்புகளை தெரியப்படுத்த, நம் அடையாளத்தைக் காப்பாற்ற நம் தமிழ்ப் பள்ளிகளும், தமிழ்ச் சங்கங்களும், தென்றல் முல்லை போன்ற தமிழ்ப் பத்திரிகையும் அரும்பணியாற்றுகின்றன. அவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகள்.

தென்றல் முல்லை இதழ் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை அனைவரும் விரும்பிப் படிக்கும் விதத்தில் வடிவமைக்கப் பெற்றுள்ளது. தென்றல் முல்லையின் "முத்தமிழ் விழா இதழின்" முதல் பக்கத்திலே குழந்தைகள் கைவண்ணத்தில் அன்னையர் தின வாழ்த்து மற்றும் தமிழர் பண்பாடும் பாரம்பரியமும் பெருமையும் கண்களைக் கவரும் வண்ணம் செவ்வனே சித்தரிக்கப் பட்டிருந்தன.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கச் செயற்குழு தலைவர் திரு. செந்தில் மலைக்கொழுந்து குமார் அவர்கள் தம் உரையில் முத்தமிழ் விழா வாழ்த்துகளைத் தெரிவித்துக் கொண்டார். இந்த ஆண்டு 39வது வட அமெரிக்கத் தமிழ்ச் சங்கப் பேரவை நியூ ஜெர்சியில் நடைபெற்றது. பேரவையில் கலந்து கொண்ட விருந்தினர்கள் சிலர் முத்தமிழ் விழாவில் கலந்து கொண்டதில் இரட்டிப்பு மகிழ்ச்சி அடைவதாகக் கூறியுள்ளார். பொன்விழாவை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் நம் சங்கத்தின் எதிர் கால வளர்ச்சிக்கு உறுதுணையாக இருக்க வேண்டி நம் எல்லோரையும் கேட்டுக் கொண்டிருக்கின்றார்.

தென்றல் முல்லை இதழின் முதன்மை ஆசிரியர் முனைவர் பாலா குப்புசாமி அவர்கள், தம் உரையை அன்னையர் மற்றும் தந்தையர் தின வாழ்த்துகளுடன் தொடங்கி, கடந்த ஏப்ரல் மாதம் 11ஆம் தேதி இணைய வழியில் சிறப்பாக நடந்த இளம் எழுத்தாளர்களின் கலந்துரையாடல் இனி வரும் காலங்களிலும் தொடரும் என்று அவர் அறிவித்துள்ளது மிகவும் பாராட்டுதலுக்குரியது. இந்த இதழை சிறப்பாகக் கொண்டு வர உதவிய அனைவருக்கும் நன்றி தெரிவித்துள்ளார். படைப்பாளிகளை ஊக்குவிப்பதில் அவருக்கு இணை அவரே.

"வாசகர் குரல்" பகுதியில் திருமதி சத்யா பாபு அவர்கள் தென்றல் முல்லையின் சித்திரைத் திருவிழா சிறப்பிதழ் குறித்துத் தனது மிகச் சிறந்த விமர்சனத்தைப் பகிர்ந்துள்ளார். "சுட்டிகளின் பக்கம்" பகுதியில், இளம் படைப்பாளிகள் வாசகர்களாகிய நம்மைத் தங்களின் இன்முகத்துடன் வரவேற்பது போன்ற உணர்வைத் தருகிறது. "அறிவோம்! தெரிவோம்!" பகுதியில் செல்வி மான்சி சந்திரசேகரன் நாம் உண்ணும் சோறு எத்தகைய கடினமான பாதையைக் கடந்து நமக்குக் கிடைக்கிறது என்பதை விரிவாக விளக்கியுள்ளார். இதைப் படிக்கும் எவரும் இனி உணவை வீணாக்க மாட்டார்கள் என்று நம்புகிறேன். "சொல் விளையாட்டு" பகுதியில் வாசகர்களுக்கு களிப்பூட்டும் வகையில் மிக அருமையான சொல் விளையாட்டை வடிவமைத்துத் தந்திருக்கிறார் செல்வி இலக்கியா பாலமுருகன்.



தமிழரின் மரபிசைகள் மற்றும் நாட்டுப் புறக்கலைகளை அறிந்து கொள்ளவும், அவை அழியாமல் இருக்கச் செய்யப்படும் ஒரு சிறு முயற்சி தான் "வெளிச்சம்" பகுதி. இந்த இதழில் தமிழர்களின் நாட்டுப்புறக் கலையான கரகாட்டத்தின் சிறப்புகளை மிகவும் அழகாக விளக்கியுள்ளார்கள் திருமதி அபிநயா மோகன்குமார் மற்றும் செல்வி இனியா எழில் வடிவன். இதன் மூலம் நாமும் நம்

குழந்தைகளுக்கு மரபிசைகளையும் நாட்டுப்புறக் கலைகளையும் கற்றுத்தர வேண்டும் என்ற ஆர்வம் பிறக்கிறது.

செல்வன் ஸ்ரீருத்ரேஷ் மணிவண்ணன் மற்றும் செல்வி ஹாசினி விஸ்வசாரதி ஆகியோர் நேர மேலாண்மையின் அவசியத்தைச் சிறப்பாக எடுத் துரைத்துள்ளனர். ஒருவரை வஞ்சித்துக் கெடுப்பதற்குக் காரணமாக இருப்பது பேராசையே. எனவே, பேராசைக்கு அடிமையாகக் கூடாது என்ற திருக்குறள் கருத்தை லியோ டால்ஸ்டாயின் சிறுகதை மூலம் மிகவும் அழகாக விளக்கிய செல்வி தியா கமல பாரதிக்கு மனமார்ந்த பாராட்டுகள். நாமும் பேராசை என்னும் வலைக்குள் சிக்காமல் என்றும் விழிப்புடன் இருப்போம். செல்வன் அதர்வா தனக்குப் பிடித்த இலையுதிர் காலத்தைப் பற்றி அழகாக விவரித்துள்ளார்.

குழந்தைகளின் எழிலோவியங்கள் நம் கண்களைக் கவருகின்றன. அதிலும் அன்னையர் தின வாழ்த்து மடல்கள் குழந்தைகளால் ஓவியங்களாகப் பகிரப் பட்டது மிகவும் சிறப்பு. "என் மொழி என் அடையாளம்" என்ற தலைப்பில் செல்வன் அருள் இரத்தினம் மிகவும் நேர்த்தியாகக் கட்டுரை வரைந்துள்ளார். எங்கும் தமிழ், எதிலும் தமிழ் நம் இல்லத்திலும் நம் உள்ளத்திலும் நிலையாக இருக்க வேண்டும் என்று கூறியது மிகச் சிறப்பு. "உணவே மருந்து" என்ற பகுதியில் செல்வன் கவினுக்கு மட்டுமல்ல நம்முடைய எல்லாக் குழந்தைகளுக்கும் நம் பாரம்பரிய உணவுகளில் உள்ள பொருட்களின் சிறப்பை எளிமையாகவும் அழகாகவும் சொல்லித் தரும் திருமதி கீதாதேவி சுந்தர்ராஜ் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இந்த இதழில் உளுந்து மற்றும் ஊறுகாயின் சிறப்புகளைப் பகிர்ந்துள்ளார்.

"ஆறு வித்தியாசங்கள் பகுதி" - இது குழந்தைகளுக் கான பகுதி. குழந்தைகள் போட்டி போட்டுக்கொண்டு ஆறு வித்தியாசங்களை கண்டுபிடிப்பார்கள். நாம் நம் சிறுவயதில் விளையாடியதை நம் குழந்தைகளும் விளையாடும் வண்ணம் இப்பகுதியை உருவாக்கிய செல்வி கீர்த்தனா கணேஷுக்கு மிக்க நன்றி. "வரலாற்றுப் பாதையில் ஒரு பயணம்" பகுதியில் செல்வி இனயா நிசாமுதீன் "கோல்டன் நுழைவுப் பாலம்" மற்றும் "லிங்கன் நினைவகம்" ஆகியவற்றின் சிறப்புகளை அழகாக விளக்கியுள்ளார்.

கடந்த ஜூன் மாதம் 6ஆம் தேதி கொண்டாடப்பட்ட "பிரடெரிக் தமிழ்ப்பள்ளியின் 15ஆம் ஆண்டு விழா"வை திருமதி சுஹாசினி ஜெகன்நாதன் அவர்கள் சிறப்பாக விவரித்துள்ளார். இவ்விழா தமிழ் மொழி, பண்பாடு மற்றும் மாணவர் சாதனைகளைக் கொண் டாடும் வகையில் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது. பள்ளியின் 10ஆம் நிலையை வெற்றிகரமாக நிறைவு செய்த 15 மாணவர்களுக்கான "பட்டமளிப்பு விழா" நெஞ்சை நெகிழச் செய்வதாக அமைந்தது.

வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம் இணைந்து நடத்திய "சித்திரை விழாக் கொண்டாட்டம்" குறித்து திரு. கிஷோர் சிங் அவர்கள் தொகுத்து வழங்கிய இக்கட்டுரை, விழாவின் நிகழ்வுகளை வாசகர்களின் கண்முன்னே கொண்டுவந்து நிறுத்துகிறது. பல்சுவை நிகழ்ச்சிகளும், "தென்றல் முல்லை "இதழ் வெளியீடும் மிகச் சிறப்பாக நடைபெற்றன. குறிப்பாக, மாலையில் நம் வாசிங்டன் தமிழ்ச்சங்கம் உள்ளூர் இசைக்குழு வான "இரசிகா குழுவினர்" தம் இன்னிசையால் எல்லோரையும் மெய்மறக்கச் செய்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

வட விர்ஜினியா மாநிலத்தில் உள்ள ஓக்டன் பள்ளி யில் கடந்த மே 30, 2026 அன்று கொண்டாடப்பட்ட "வள்ளுவன் தமிழ் மையத்தின் 16ஆம் ஆண்டு விழா"வை திரு. தினேஷ்குமார் பழனிச்சாமி அவர்கள் மிகவும் சிறப்பாகவும் அழகாகவும் விவரித்துள்ளார். வள்ளுவன் தமிழ் மையம் தன் 16ஆவது ஆண்டு விழாவை பதினாறு வகை செல்வங்களை மையமாக வைத்து கோலாகலமாகக் கொண்டாடியது. ஆண்டுவிழாவின் கருப்பொருளான "பதினாறு செல்வங்கள் அன்றும் இன்றும்" என்ற தலைப்பில் மாணவர்களின் கருத்தரங்கமும் மிகச் சிறப்பாக நடைபெற்றுள்ளது.

மார்ச் மற்றும் ஏப்ரல் மாதத்தில் வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம் இணைய வழியில் நடத்திய பரிபாடல் மற்றும் புறநானூறு ஆகியவற்றின் "சங்க இலக்கியச் சொற்பொழிவுகள்" குறித்து திருமதி புவனேஸ்வரி இராஜேஷ்குமார் அவர்கள் விளக்கிய விதம் பாராட்டுதலுக்குரியது. நாமும் இனி நடக்கவிருக்கும் சொற்பொழிவுகளில் கலந்துகொண்டு சங்க இலக்கியங்களைக் கேட்டு மகிழ்வோம்.

"தென்றல் முல்லை - இளம் எழுத்தாளர்களின் கலந்துரையாடலின் வாழ்த்துரை" ஒரு அழகிய உரைநடை இலக்கியம் போல திருமதி சுசீலா பழனிசாமி அவர்களால் வடிக்கப்பட்டுள்ளது. இந்த வாழ்த்துரையின் வியக்கத்தக்க அம்சம் என்னவென் றால், எழுத்தாளர் திருமதி சுசீலா பழனிசாமி அவர்கள் தமிழின் உயிரெழுத்துகளின் (அ முதல் ஔ வரை) அகரவரிசையில் பத்திகளை அமைத்து இந்த வாழ்த்துரையை வடித்திருப்பதுதான். இளம் சாதனையாளர்களின் பெயர்களையும், அவர்களின்

தனித்திறமைகளையும் அழகாகப் பதிவு செய்திருப்பது இந்த வாழ்த்துரையின் ஆகச்சிறந்த பகுதியாகும். மொழியையும் இளம் தளிர்களையும் ஒருசேரக் கொண்டாடும் இந்த நன்முயற்சிக்கு மனமார்ந்த பாராட்டுகள்!

"பசுமரத்தாணியாய் நம் ஊரின் நினைவுகள்" என்ற தலைப்பில் திருமதி சத்யா பாபு அவர்கள் தன் சிறுவயது ஞாபகங்களை மிக அழகிய கவிதையாக வடித்திருக்கிறார். படித்து முடித்ததும் நம்மையறியாமல் நம் சொந்த ஊருக்கே அழைத்துச் செல்லும் ஒரு மாயாஜாலத்தைச் செய்கிறது இந்தக் கவிதை. அவரின் இந்த அழகிய படைப்புக்கும், தமிழ் சேவைக்கும் என் மனமார்ந்த வாழ்த்துகளும் பாராட்டுகளும்!

பெண்மை பெருமை பகுதியில் பெண்ணியவாதி கவிஞரான திருமதி சுகிர்தராணி அவர்களைப் பற்றியும் அவர்களின் சாதனையைக் குறித்தும் எங்களுக்கு எடுத்துரைத்த திருமதி ரஹீமா அலாவுதீன் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். நம் பாரதி கண்ட புதுமைப்பெண்ணாகக் கவிஞர் சுகிர்தராணி திகழ்கிறார். அவர் காட்டிய துணிச்சலான பாதையில் நாமும் பயணிப்போம்.

"படைப்பும் படைப்பாளியும்" பகுதியில் கி. இராஜநாராயணன் அவர்களையும் அவர் எழுதிய "மாயமான்" என்ற சிறுகதையையும் திரு. கமலபாரதி பச்சியப்பன் அவர்கள் அறிமுகம் செய்துள்ளார். சீதை விரும்பிய மாயமானைப் போன்று இவ்வுலகில் போலித்தனமான பல மாயமான்கள் உலா வரக்கூடும். நாம் வாழ்வில் எப்போதுமே விழிப்புணர்வோடு இருக்க வேண்டும் என்ற கருத்தை இந்தச் சிறுகதை மிக அழகாகப் பறைசாற்றுகிறது என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

"பாரதியார் தமிழ்ப்பள்ளி ஆண்டு விழா" வை திருமதி புவனேஸ்வரி சதீஷ் குமார் அவர்கள் மிக அழகாகத் தொகுத்து வழங்கியுள்ளார். வயலின் மற்றும் பியானோ இசையுடன் கூடிய பல்சுவை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தன. மதியம் தலைவாழையிலை விருந்தைத் தொடர்ந்து விளையாட்டுகளும் இடம்பெற்றன. பாரம்பரிய பறை இசையுடன் இவ்விழா மிகுந்த உற்சாகத்துடன் கொண்டாடப்பட்டது.

தமிழைக் கற்போம்! கற்பிப்போம்!





சுட்டிகளுக்காக... சுட்டிக ளால்... சுட்டிகளால்...

இது சுட்டிகளின் பக்கம்

(இளம் துணை ஆசிரியர்களால்)





அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 39-வது தமிழ் விழா - எனது அனுபவங்கள்



செல்வி ஆராதனா அருண்

தாயகம் தாண்டி தமிழர் கூடும் விழா! தமிழின் மணம் உலகெங்கும் பரவும் விழா!

சூலை மாதம் என்றாலே மகிழ்ச்சி நிறைந்த மாதம். இதற்கு இரண்டு காரணங்கள் உள்ளன. ஒன்று கோடை விடுமுறை ஆரம்பித்து விடும். மற்றொன்று நம் தமிழ்ச்சங்கப் பேரவையின் தமிழ் விழாவும் தொடங்கும். இந்த ஆண்டு அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 39-வது தமிழ் விழா சூலை மாதம் 2, 3, மற்றும் 4 தேதிகளில் நியூ செர்சி, எடிசன் நகரில் நடைப்பெற்றது. இந்த விழா, இராசேந்திர சோழனின் கடாரம் கொண்ட வெற்றியின் 1000-ஆம் ஆண்டு நிறைவையும், தனித்தமிழ் இயக்கத்தின் முன்னோடியான மறைமலை அடிகளின் 150-ஆவது பிறந்த நாள் விழாவையும் சிறப்பாகக் கொண்டாடும் நோக்கத்தில் நடைபெற்றது.

என் பயணம்:

நான் என் அப்பா, அம்மா மற்றும் என் தங்கையுடன் வர்சீனியாவில் இருந்து, நியூ செர்சிக்கு சூலை 1 ம் தேதி சீருந்தில் புறப்பட்டுச் சென்றோம். சீருந்துப் பயணம் சிறப்பாக இருந்தது. பேர்ஃபீல்ட் இன் என்ற விடுதியில் தங்கினோம்.

வாகை சூடி போட்டிகள்:

இவ்வருடம் வாகை சூடி போட்டிகள் அறிவியல் தேனீ, கலைத் தேனீ, குறள் தேனீ, தமிழ்த் தேனீ மற்றும் படைப்புத் தேனீ என ஐந்து பிரிவுகளாக நடைப்பெற்றன. பிப்ரவரி மாதத்திலேயே போட்டி களுக்கு பதிவு ஆரம்பித்தது. முதல் சுற்றுப் போட்டிகள் மே மாதத்தில் இணையவழியாக நடைபெற்றன. அதில் தகுதி பெற்ற மாணவர்களை மட்டும் தேர்வு செய்து, சூன் மாதத்தில் ஒவ்வொரு போட்டிக்கும் தனித்தனியாக பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டன. இந்தப் பட்டறைகள், அந்தந்த போட்டிகளில் சிறந்து விளங்கிய வல்லுநர்களால் வழங்கப்பட்டன.

போட்டி அனுபவங்கள்:

நானும் என் தங்கையும் படைப்புத் தேனீ மற்றும் கலைத் தேனீ பிரிவுகளில் கலந்து கொண்டோம். கட்டுரை, புத்தாக்கம், கவிதை, ஓவியம், கதை போன்ற போட்டிகள் படைப்புத் தேனீ பிரிவின் கீழ் செரட்டன் எடிசன் விடுதியில் ஜூலை 2-ஆம் தேதி நடைபெற்றன. ஆடல், பாடல், பேச்சுப் போட்டிகள் கலைத் தேனீ பிரிவின் கீழ் நியூ செர்சி எக்ஸ்போ கன்வென்சன் சென்டரில் சூலை 2 மற்றும் 3-ஆம் தேதிகளில் நடைபெற்றன. நம் தமிழ்ப் பாரம்பரிய உடை அணிந்து போட்டிகளில் மிகவும் உற்சாகமாகப் பங்கேற்றேன்.

கலை நிகழ்ச்சிகள்:

போட்டிகள் முடிந்த பிறகு நியூ செர்சி எக்ஸ்போ கன்வென்சன் சென்டரில் இரவு உணவு உண்டோம். சைவம் மற்றும் அசைவம் என இரு வகைகளிலும் பலவித சுவையான உணவுகள் பரிமாறப்பட்டன. போட்டிகள் இல்லாத நேரங்களில் ஆடல், பாடல், நாடகம் போன்ற கலை நிகழ்ச்சிகளையும், சில தமிழ் அறிஞர்களின் உரையையும் கேட்டு மனம் நிறைந்து களித்தேன். அங்கே சில பழைய நண்பர்களை மீண்டும் சந்தித்து மகிழ்ந்தேன். அதோடு சில புதிய நண்பர்களையும் பெற்றேன். வெளியே பாரம்பரிய உடைக் கடைகளும் சுவையான தமிழ் உணவுக் கடைகளும் இருந்தன. அங்கிருந்து நான் இரண்டு அழகிய பட்டுப் பாவாடை, சட்டைகளை வாங்கினேன்.

பரிசளிப்பு விழா:

போட்டி முடிவுகள் சூலை 3-ம் தேதி இரவு முதல் 4-ம் தேதி காலை வரை அலைபேசி வழியாக தெரிவிக்கப்பட்டன. பரிசளிப்பு விழா 4-ம் தேதி காலை சிறப்பாக நடைபெற்றது. நான் மகிழ்ச்சியுடன் என் பரிசுகளைப் பெற்றுக்கொண்டு அங்கிருந்து புறப்பட்டோம். அன்று மாலை நாங்கள் வர்சீனியா திரும்பினோம். இவ்வாறு இந்த ஆண்டின் ஃபெட்னா தமிழ் விழா என் மனதில் என்றும் மறக்கமுடியாத இனிய நினைவாக நிறைவு பெற்றது.

"தாயகம் கடந்தும் தமிழ்மொழி வளர்ப்போம்! தலைமுறை கடந்தும் தமிழ் உணர்வு காப்போம்!"



வணக்கங்க...

அடுத்த நமது "அறிவோம் தெரிவோம்" பகுதிக்கு வந்துட்டோம்!

சரிங்க... சளி, காய்ச்சல், தலைவலி என்றாலே நமக்கு முதலில் ஞாபகம் வருவது மாத்திரைதான்! ஆனா அந்தக் காலத்தில் நம்ம முன்னோர்களுக்கு CVS-ம் இல்லை, Walgreens-ம் இல்லையே! அப்போ என்ன செஞ்சிருப்பாங்க?

அவங்களுடைய மருந்தகம் இயற்கைதாங்க!



செல்வி மான்சி சந்திரசேகரன்

எங்க அம்மா வீட்டுல வல்லாரை சட்னி, முருங்கைப்பூ அடை, மணத்தக்காளிக் குழம்பு, கரிசலாங்கண்ணி சட்னின்னு ஏதாவது செஞ்சுட்டே இருப்பாங்க.

நானோ, "அய்யோ அம்மா! ஏன் என்னை இப்படி கொல்லுற? ஒரு பாஸ்தா, பீட்சா செஞ்சு கொடுக்கக் கூடாதா?"ன்னு கேட்பேன்.

அப்பதான் அம்மா, "இந்தப் பாடலைப் படிச்சுப் பாரு. நான் ஏன் இதெல்லாம் செஞ்சு கொடுக்கிறேன்னு உனக்கே புரியும்!"னு சொன்னாங்க.

படிச்சுப் பார்த்த பிறகுதாங்க எனக்கும் புரிஞ்சுது! நமக்குத் தெரிந்த சாதாரண செடிகள், கீரைகள், பூக்களுக்குப் பின்னாடி இவ்வளவு பாரம்பரிய மருத்துவப் பயன்கள் சொல்லப்பட்டிருக்கிறதான்னு ஆச்சரியமா இருந்தது.

"அட! இதுக்குக்கூட நம்ம முன்னோர்கள் ஒரு இயற்கை வழி சொல்லி வைத்திருக்காங்களே!"னு நினைக்க வைத்தது.

அப்படி என்னதான் சொல்லி வைத்திருக்கிறது இந்த "அருந்தமிழ் மருத்துவம் 500"?

வாங்க... கொஞ்சம் படிச்சு அறிவோம்... தெரிஞ்சதை மற்றவர்களுக்கும் தெரிவோம்!

- மூளைக்கு வல்லாரை, முடிவளர நீலிநெல்லி
- மூளைக்கு முசுமுசுக்கை, எலும்பிற்கு இளம்பிரண்டை
- பல்லுக்கு வேலாலன், பசிக்கு சீரகமிஞ்சி
- கல்லீரலுக்கு கரிசாலை, காமாலைக்கு கீழாநெல்லி
- கண்ணுக்கு நந்தியாவட்டை, காதுக்கு சுக்குமருள்
- தொண்டைக்கு அக்கரகாரம், தோலுக்கு அருகுவேம்பு
- நரம்பிற்கு அமுக்குரான், நாசிக்கு நொச்சிதும்பை உரத்திற்கு முருங்கைப்பூ, ஊதலுக்கு நீர்முள்ளி
- முகத்திற்கு சந்தனநெய், மூட்டுக்கு முடக்கறுத்தான்
- அகத்திற்கு மருதம்பட்டை, அம்மைக்கு வேம்புமஞ்சள்
- உடலுக்கு எள்ளெண்ணை,உணர்ச்சிக்கு நிலப்பனை
- குடலுக்கு ஆமணக்கு, கொழுப்பெதிர்க்க வெண்பூண்டு
- கருப்பைக்கு அசோகுபட்டை, களைப்பிற்கு சீந்திலுப்பு
- குருதிக்கு அத்திப்பழம், குரலுக்கு தேன்மிளகே!
- விந்திற்கு ஓரிதழ்தாமரை, வெள்ளைக்கு கற்றாழை
- சிந்தைக்கு தாமரைப்பூ, சிறுநீர்க்கல்லுக்கு சிறுகண்பீளை
- கக்குவானுக்கு வசம்புத்தூள், காய்ச்சலுக்கு நிலவேம்பு
- விக்கலுக்கு மயிலிறகு, வாய்ப்புண்ணிற்கு மணத்தக்காளி
- நீர்க்கோவைக்கு சுக்குமிளகுநீர், நீரிழிவிற்கு ஆவாரைக்குடிநீர்
- வேர்க்குருவிற்கு பனைநுங்கு, நீர்வெட்டைக்கு சிறுசெருப்படையே
- தீப்புண்ணா குங்கிலிய வெண்ணை, சீழ்காதுக்கு நிலவேம்பு
- நாப்புண்ணிற்கு திரிபலாவேலன், நஞ்செதிர்க்க அவரிஎட்டி

- குருதிகழிச்சலுக்கு துத்திதேற்றான், குருதிகக்கலுக்கு இம்பூரல்வேர்
- பெரும்பாட்டிற்கு அத்திநாவல், பெருவயிறுக்கு மூக்கிரட்டை
- கக்கலுக்கு எலுமிச்சைஏலம்,கழிச்சலுக்கு தயிர்சுண்டை
- அக்கிக்கு வெண்பூசனை, ஆண்மைக்கு பூனைக்காலி
- வெண்படைக்கு பூவரசு கார்போகி, விதைநோயா கழற்சிவிதை
- புண்படைக்கு புங்கன்சீமையகத்தி, புழுகுடற்கு வாய் விளங்காமணக்கு
- கால்வெடிப்பா மருதாணிகிளிஞ்சல், கரும்படை வெட்பாலைசிரட்டை
- கால்சொறிக்கு வெங்காரபனிநீர், கானாகடிக்கு குப்பைமேனி
- உடல்பெருக்க உளுந்துஎள்ளு, உளம்மயக்க கஞ்சாகள்ளு
- உடல்இளைக்க தேன்கொள்ளு, உடல் மறக்க இலங்கநெய்யே


அருந்தமிழர் வாழ்வியலில் அன்றாடம் சிறுபிணிக்கு அருமருந்தாய் வழங்கியதாய் ஆசிரியர் சொல்லி இருக்கிறார்.

இப்ப புரியுதுங்க... அம்மாவின் வல்லாரை சட்னிக்குப் பின்னாடியும் ஒரு காரணம் இருக்குன்னு! ஆனா அதுக்காக பீட்சாவை விட்டுடுவேன்னு நினைக்காதீங்க... லைஃப்ல ஒரு பேலன்ஸ் வேணும்!

இதுல சொன்ன நிறைய பொருட்கள் அமெரிக்காவில் கிடைக்காது. ஆனா எங்க அம்மா கிடைக்கிறதை எப்படியாவது சேர்த்துடுவாங்க! எனக்கும் அக்காவுக்கும் சளி பிடிச்சா முதலில், அதிமதுரம், திப்பிலி, துளசின்னு ஒரு 1.5 பொருள் போட்டு கஷாயம் ரெடி!

நீங்களும் உங்களுக்குத் தெரிந்த இயற்கை முறைகளைப் பயன் படுத்துங்க!

சரிங்க, நன்றி! மீண்டும் அடுத்த பகுதியில் சந்திப்போம். அதுவரை அறிவோம்! தெரிவோம்!



செல்வி இலக்கியா பாலமுருகன்

சொல் விளையாட்டு

குறிப்புகளைப் படித்துச் சொல்லைக் கண்டறிக. எல்லாச் சொல்லின் இறுதி எழுத்தும் 'கம்' என முடியவேண்டும்.

1					
2					
3					
4					
5					

1. ஒருவரையொருவர் முதன்முதலில் பார்க்கும்போது சொல்வது.
2. காலையில் எழுந்தவுடன் உடற்பயிற்சி செய்வது சிலரது_____
3. முதன்முதலில் மேடையேறிப் பேசும்போது சிலருக்கு ஏற்படுவது.
4. நாடகம் உள்ளிட்ட பொழுதுபோக்கு நடைபெறும் இடம்.
5. நம்மிடம் இருக்கவேண்டிய இன்றியமையாத பண்புகளுள் ஒன்று.

விடைகள் 36 ஆம் பக்கம் பார்க்க





இமயமலையில் பெரும் வெள்ளம்



செல்வன் விநாயக் பாபு கணேஷ்

கடந்த ஆகஸ்ட் 26, 2026 அன்று காலையில், அழகான மலைகள் நிறைந்த நேபாள நாட்டில் திடீரென ஒரு மிகப்பெரிய வெள்ளம் ஏற்பட்டது. நேபாளம் என்பது உலகிலேயே மிக உயரமான எவரெஸ்ட் சிகரம் இருக்கும் ஒரு அழகான மலைப் பிரதேச நாடாகும்.

மலையின் உச்சியில் இருந்த பனிப்பாறைகள், பாறாங்கற்கள் மற்றும் மண் ஆகியவை திடீரென உடைந்து கீழே இருந்த ஆறுகளில் விழுந்தன. இதனால் ஆற்றில் ஒரு பிரம்மாண்டமான நீர்ச்சுவர் போன்ற வெள்ளம் உருவானது. இந்த வெள்ளம் மிக அதிவேகமாக வந்ததால், சில நிமிடங்களிலேயே அங்கிருந்த கிராமங்கள், பாலங்கள் மற்றும் வீடுகளை அடித்துச் சென்றது. நேபாளம் உலகெங்கிலும் உள்ள மக்கள் விரும்பும் ஒரு சுற்றுலாத் தலம் என்பதால், இந்த வெள்ளம் அங்குள்ள உள்ளூர் மக்களை மட்டுமின்றி, அமெரிக்காவின் வர்ஜீனியா மற்றும் பிற மாநிலங்களில் இருந்து அங்கு சென்றிருந்த மக்களையும் பாதித்துள்ளது. இதனால் அவர்களின் குடும்பத்தினர் கவலையுடன் செய்திகளை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள்.

பனிப்பாறை உடைந்தது இயற்கையாக நடந்த ஒரு நிகழ்வாகத் தெரிந்தாலும், இதற்குப் பின்னால் இருக்கும் உண்மையான காரணம் மனிதர்களால் உருவாக்கப்பட்ட காலநிலை மாற்றம் (Climate Change) என்று விஞ்ஞானிகள் கூறுகிறார்கள்.

நாம் வாகனங்கள் மற்றும் பெரிய தொழிற்சாலைகளில் இருந்து அதிகப்படியான புகையைக் காற்றில் வெளியிடும் போது, அது பூமியைச் சுற்றி ஒரு போர்வை போல மூடி, பூமியின் வெப்பத்தை உயர்த்துகிறது. இதனால் நேபாளம் போன்ற உயரமான இடங்களில் உள்ள பனிப்பாறைகள் மிக வேகமாக உருகுகின்றன. பனி உருகும் போது மலைப்பகுதிகள் பலவீனமடைந்து, திடீர் நிலச்சரிவுகளும், ஆபத்தான வெள்ளமும் ஏற்பட வழிவகுக்கிறது.

மலைகள் சரிவாக இருப்பதை நம்மால் மாற்ற முடியாது, ஆனால் நாம் பூமி வெப்பமயமாதலை மாற்ற முயற்சிக்கலாம். இயற்கையையும் மக்களின் உயிரையும் பாதுகாக்க நாம் இவற்றைச் செய்யலாம்:

தூய்மையான ஆற்றலைப் பயன்படுத்துதல்: சைக்கிள் ஓட்டுவது, நடந்து செல்வது மற்றும் சூரிய ஒளி (Solar) அல்லது காற்று மூலம் மின்சாரம் தயாரிப்பது பூமியின் வெப்பத்தைக் குறைக்க உதவும்.

மரங்களை நடுதல்: மரங்களின் வேர்கள் மண்ணை உறுதியாகப் பிடித்துக் கொள்வதால், கனமழை பெய்தாலும் மண் சரிந்து போகாமல் பாதுகாக்கும்.

முன்னெச்சரிக்கை கருவிகள்: வெள்ளம் வருவதற்கு முன்பே மக்களுக்குத் தெரிவிக்கும் சைரன்கள் போன்ற எச்சரிக்கை அமைப்புகளை உருவாக்குவதன் மூலம், மக்கள் பாதுகாப்பான உயரமான இடங்களுக்குச் செல்ல முடியும்.

வருத்தத்திற்குரிய விஷயம் என்னவென்றால், இந்த வெள்ளத்தில் பலர் தங்கள் உயிரை இழந்துள்ளனர். மேலும், காணாமல் போன ஆயிரக்கணக்கான மக்களைத் தேடும் பணியில் மீட்புக் குழுவினர் இப்போதும் தீவிரமாக ஈடுபட்டுள்ளனர். நேபாளத்தில் உள்ள குழந்தைகளுக்கும் குடும்பங்களுக்கும், அதே போல் வர்ஜீனியா மற்றும் அமெரிக்கா முழுவதும் தவித்துக்கொண்டிருக்கும் குடும்பங்களுக்கும் நமது அன்பும் ஆதரவும் என்றும் இருக்கும். அவர்கள் இந்தத் துயரத்திலிருந்து மீண்டு வர நாம் அனைவரும் மனதாரப் பிரார்த்திப்போம்.





கவினும், அம்மாவும்: உணவே மருந்து

– பாகம் 3



ஆக்கம்: செல்வன் கவின் விஸ்வசாரதி மற்றும்
திருமதி கீதாதேவி சுந்தர்ராஜ்

நல்ல உணவு – நல்ல ஆரோக்கியம்!

பள்ளியில் இருந்து வீடு திரும்பிய கவின், பையை வைத்துவிட்டு சமையலறைக்கு ஓடினான்.

கவின்: "அம்மா! எனக்கு ரொம்பப் பசிக்கிறது!"

அம்மா: "மதிய உணவை நன்றாகச் சாப்பிட்டாயா?"

கவின்: "இல்லை அம்மா... நண்பர்கள் சிப்ஸ் சாப்பிட்டார்கள். அதனால் நானும் சாப்பாட்டை கொஞ்சம்தான் சாப்பிட்டேன்."

அம்மா: "அடடா! சிப்ஸ் மட்டும் சாப்பிட்டால் உடலுக்குத் தேவையான எல்லாச் சத்துக்களும் கிடைக்குமா?"

கவின்: "கிடைக்காதா?"

அம்மா: "கிடைக்காது கண்ணா! நம் உணவில் காய்கறிகள், கீரைகள், பருப்பு வகைகள், பழங்கள், பால் போன்ற பலவகையான சத்தான உணவுகள் இருக்க வேண்டும்."

கவின்: "அப்படியா அம்மா! சுவையாக இருப்பது மட்டும் போதாது... சத்தாகவும் இருக்க வேண்டும்!"

அம்மா: "அதுதான் சரி!"

உ ளுந்து

அம்மா ஒரு கிண்ணத்தில் இருந்த ஊறவைத்த பொருளைக் காட்டினார்.

கவினின் விடுகதை

உருண்டையாக இருப்பேன், உணவில் சேர்ந்து சுவை தருவேன், இட்லி, தோசையில் இடம் பெறுவேன், சத்தான பருப்பு வகையைச் சேர்ந்திருப்பேன். நான் யார்?

பதில்: உளுந்து

கவின்: "அம்மா! உளுந்தில் என்ன சத்து இருக்கிறது?"

அம்மா: "உளுந்தில் புரதம் உள்ளிட்ட ஊட்டச்சத்துக்கள் உள்ளன. அதனால் இட்லி, தோசை போன்ற உணவுகளில் இது முக்கியமானது."

கவின்: "அப்படியென்றால் சத்தான உணவுகளை சாப்பிடுவது நல்ல பழக்கம்தானே?"

அம்மா: "ஆமாம்! பலவகையான உணவுகளை அளவோடு சாப்பிடுவதே சிறந்தது."

கவின்: "அம்மா! 'ஊ' என்ற எழுத்தில் என்ன இருக்கிறது?"

அம்மா: "ஊட்டச்சத்து!"

கவின்: "அது என்ன?"

அம்மா: "நம் உடல் வளரவும், வலிமையாகவும், சுறுசுறுப்பாகவும் இருக்க உதவும் தேவையான சத்துக்களைத்தான் ஊட்டச்சத்துகள் என்கிறோம்."

இன்னொரு விடுகதை!

உடல் வளர உதவுவேன், வலிமை பெற துணை நிற்பேன், பல உணவுகளில் இருப்பேன், ஆரோக்கியத்திற்கு உதவுவேன். நான் யார்?

பதில்: ஊட்டச்சத்து

கவின்: "ஓ! அப்படியென்றால் சாப்பிடும்போது சுவையை மட்டும் பார்க்கக்கூடாது. அதில் ஊட்டச்சத்து இருக்கிறதா என்றும் பார்க்க வேண்டும்!"

அம்மா: "மிகச் சரி!"

கவினின் நல்ல முடிவு

கவின் சிறிது நேரம் யோசித்தான்.

கவின்: "அம்மா! இனிமேல் நான்..."

- சத்தான உணவைத் தேர்ந்தெடுப்பேன்.
- காய்கறி, பழங்களைச் சாப்பிடுவேன்.
- போதுமான தண்ணீர் குடிப்பேன்.
- சரியான அளவில் சாப்பிடுவேன்.
- உணவை நன்றாக மென்று சாப்பிடுவேன்.
- நொறுக்குத் தீனிகளை அளவோடு சாப்பிடுவேன்.

அம்மா: "அருமை கவின்! இதுதான் நல்ல உணவுப் பழக்கம்!"

கவின்: "என் நண்பர்களுக்கும் இதைச் சொல்வேன்!"

கவினின் குட்டி வாசகம்

"சுவைக்காக மட்டும் சாப்பிடாதே...
சத்திற்காகவும் சாப்பிடு!
நல்ல உணவு நல்ல பழக்கம் நல்ல ஆரோக்கியம்!"

– தொடரும்–

மரபு இசைக்கருவிகள் மற்றும் விளையாட்டுகள்



தொகுப்பு: செல்வி இனியா எழில்வடிவன் மற்றும் திருமதி அபிநயா மோகன்குமார்

தென்றல்முல்லை வாசகர்களுக்கு வணக்கம்!

தமிழர்களின் பாரம்பரிய இசைக்கருவியான மேளம் பற்றிப் பார்க்கலாம்.

முன்னுரை

தமிழர்களின் வாழ்க்கையோடு இசைக்கும் இசைக்கருவிகளுக்கும் மிக நெருங்கிய தொடர்பு உண்டு. பிறப்பு முதல் இறப்பு வரை நடைபெறும் பல்வேறு சடங்குகள், கோவில் திருவிழாக்கள், திருமணங்கள், ஊர்வலங்கள், நாட்டுப்புறக் கலை நிகழ்ச்சிகள் போன்றவற்றில் இசைக் கருவிகள் முக்கிய இடத்தைப் பெற்றுள்ளன.

அவற்றுள் மேளம் குறிப்பிடத்தக்க ஒன்றாகும். "மேளம்" என்பது ஒரு குறிப்பிட்ட தனிக் கருவியை மட்டும் குறிக்காமல், பல தாள மற்றும் இசைக்கருவிகள் இணைந்து வழங்கும் இசைக்குழுவையும் குறிக்கும். குறிப்பாக, தமிழர் மரபில் கோவில் மேளம், பெரிய மேளம், நையாண்டி மேளம், பறை மேளம், உருமி மேளம், கெட்டி மேளம் போன்ற பல வடிவங்கள் காணப்படுகின்றன.

மேள இசையின் அடிப்படை நோக்கம் மகிழ்ச்சியையும் விழாக்கோலத்தையும் உருவாக்குவது மட்டுமல்ல. பழங்காலத்தில் அது செய்தி அறிவித்தல், மக்கள் கூடுவதற்கான அறிகுறி, போர் மற்றும் வெற்றி போன்ற முக்கிய நிகழ்வுகளை அறிவித்தல் போன்ற சமூகப் பணிகளையும் செய்தது. குறிப்பாக, பறை போன்ற தாளக் கருவிகள் சங்ககாலத்திலிருந்தே தகவல் பரிமாற்றத்திற்குப் பயன்படுத்தப்பட்டதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன.



செல்வி இனியா எழில்வடிவன்

மேளத்தின் தோற்றம்

மேள இசையின் வரலாற்றை அறிய வேண்டுமெனில், முதலில் பழந்தமிழரின் தாளக் கருவி மரபைப் புரிந்துகொள்ள வேண்டும். சங்ககாலத் தமிழ்ச் சமூகத்தில் பறை, முரசு, முழவு போன்ற பல தாளக் கருவிகள் பயன் படுத்தப்பட்டன. இவை இசைக்காக மட்டுமல்லாமல், சமூகத் தகவல்களை மக்களிடம் கொண்டுசேர்ப்ப தற்கும் பயன்படுத்தப்பட்டன. குறிப்பாக, பறை அடிப்பதன் மூலம் மக்கள் ஒன்றுகூடுதல், அரசாணை அறிவித்தல், போர் அல்லது வெற்றிச் செய்தி தெரிவித்தல் போன்ற பணிகள் மேற்கொள்ளப் பட்டதாக ஆய்வுகள் கூறுகின்றன.

சங்க இலக்கியங்களில் இசை மற்றும் இசைக்கருவிகள் பற்றிய பல குறிப்புகள் காணப்படுகின்றன. பின்னர் வந்த



சிலப்பதிகாரம் போன்ற படைப்புகளிலும் தமிழர்களின் இசை மற்றும் நடன மரபுகள் விரிவாகப் பதிவு செய்யப்பட்டுள்ளன. இதனால், மேள மரபு என்பது திடீரென உருவான ஒன்றல்ல; பழந்தமிழரின் நீண்டகால இசை மற்றும் தாள மரபுகளின் தொடர்ச்சியாக வளர்ந்தது என்பதை அறிய முடிகிறது. "மேளம்" என்ற சொல் காலப்போக்கில் பலவகையான இசைக்குழுக்களைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது.

கோவில்களில் இசைக்கப்படும் மேளம், திருமணங்களில் இசைக்கப்படும் கெட்டி மேளம், நாட்டுப்புற நிகழ்ச்சிகளில் இடம்பெறும் நையாண்டி மேளம், பறையை மையமாகக் கொண்ட பறை மேளம் போன்றவை இதற்குச் சிறந்த எடுத்துக்காட்டுகளாகும்.

சங்ககாலத்தில் மேள மரபு

சங்ககாலம் தமிழர்களின் இசை வரலாற்றில் முக்கியமான காலமாகும். அக்காலத்தில் இசை, நடனம், நாடகம் ஆகியவை சமூக வாழ்க்கையின் முக்கியப் பகுதிகளாக இருந்தன. பல்வேறு தாளக் கருவிகள் வீர உணர்வு, விழா, வழிபாடு, சமூக நிகழ்வு போன்றவற்றோடு தொடர்பு டையதாக இருந்தன. பறை போன்ற கருவிகள் அக்காலத்தில் ஒருவகையான தகவல்தொடர்பு சாதனமாகவும் இருந்தன.

ஒரு குறிப்பிட்ட தாளத்தை ஒலிக்கச் செய்வதன் மூலம் ஒரு கிராமத்திலிருந்து மற்றொரு கிராமத்திற்குச் செய்திகளைத் தெரிவிக்கும் வழக்கமும் இருந்ததாக ஆய்வுகள் கூறுகின்றன. விவசாயம், போர், வெற்றி, ஆபத்து, பொதுமக்கள் கூடுதல் போன்ற பல நிகழ்வுகளோடு தாளக் கருவிகள் இணைந்திருந்தன. இதன்மூலம், மேளத்தின் ஆரம்பகாலப் பயன்பாடு வெறும் பொழுதுபோக்கு இசையாக இருந்ததில்லை என்பதை அறியலாம். அது இசை, தகவல்தொடர்பு, சமூக ஒழுங்கு மற்றும் சடங்கு ஆகியவற்றுடன் இணைந்திருந்தது.

கோவில் மற்றும் சமய வாழ்க்கையில் மேளம்

காலப்போக்கில் கோவில்கள் தமிழர்களின் இசை வளர்ச்சியில் முக்கிய மையங்களாக மாறின. கோவில் வழிபாடு, திருவிழா, ஊர்வலம் போன்றவற்றில் பல்வேறு இசைக்கருவிகள் பயன்படுத்தப் பட்டன. குறிப்பாக, நாதஸ்வரத்துடன் தவில் இணைந்து இசைக்கப்படும் பெரிய மேளம் தமிழ்நாட்டின் கோவில் இசை மரபில் முக்கிய இடத்தைப் பெற்றது.

பெரிய மேளத்தில் பொதுவாக நாதஸ்வரம், தவில், தாளம் மற்றும் ஒத்து போன்ற கருவிகள் இடம்பெறும். கோவில் ஊர்வலங்கள் மற்றும் திருவிழாக்களில் நாதஸ்வர இசை முக்கியப் பங்கு வகித்ததையும், பெரிய மேளக் குழுக்கள் கோவில் இசை மரபுடன் தொடர்புடையதாக இருந்ததையும் இசை வரலாற்று ஆய்வுகள் குறிப்பிடுகின்றன. இடைக்காலத்தில் ஏற்பட்ட வளர்ச்சி பல்லவர், சோழர், பாண்டியர் போன்ற அரச மரபுகளின் காலத்தில் கோவில்கள் கலை மற்றும் பண்பாட்டின் முக்கிய மையங்களாக வளர்ந்தன.

கோவில் கட்டிடக்கலை மட்டுமல்லாமல், இசை மற்றும் நடனத்திற்கும் ஆதரவு வழங்கப்பட்டது. இதன் காரணமாக இசைக் கலைஞர்களுக்கும் கோவில் நிர்வாகத்திற்கும் நெருங்கிய தொடர்பு ஏற்பட்டது. சமய வழிபாடும் கோவில் விழாக்களும் வளர்ந்தபோது, மேள இசையும் ஒழுங்கமைந்த இசைக்குழு வடிவத்தைப் பெற்றது. இசைக் கலைஞர்கள் குறிப்பிட்ட மரபுகளையும் வாசிப்பு முறைகளையும் தலைமுறை தலைமுறையாகப் பரப்பினர்.

நாயக்கர் மற்றும் மராத்தியர் காலத்தின் தாக்கம்

தஞ்சாவூர் பகுதி தென்னிந்திய இசையின் முக்கிய மையமாக வளர்ந்த காலங்களில், தவில் தனித்த தாளக் கருவியாகவும், நாதஸ்வரத்திற்கான முக்கிய தாளத் துணையாகவும் நிலைபெற்றது. தவில்-நாதஸ்வரம் இணைந்த பெரிய மேளம் இந்த இசை மரபின் முக்கிய வடிவமாக வளர்ந்தது. நாயக்கர் மற்றும் மராத்தியர் ஆட்சிக் காலங்களில் தஞ்சாவூர் பகுதி கலை, இசை மற்றும் நடன வளர்ச்சிக்கு முக்கியமான மையமாக விளங்கியது. கோவில் மற்றும் அரச ஆதரவு காரணமாக இசைக் கலைஞர்களுக்கும் இசை மரபுகளுக்கும் தொடர்ந்து ஆதரவு கிடைத்தது. காலப்போக்கில் தவில்-நாதஸ்வரம் இணைப்பு திருமணம், காதணி விழா, வீடுபுகுதல், கோவில் சடங்கு போன்ற



திருமதி அபிநயா மோகன்குமார்

பல்வேறு வாழ்க்கைச் சடங்குகளுடன் தொடர்புடையதாக வளர்ந்தது. இதன் மூலம் பெரிய மேளம் கோவில் இசை மரபைத் தாண்டி, தமிழர்களின் சமூக மற்றும் பண்பாட்டு வாழ்க்கையிலும் முக்கிய இடத்தைப் பெற்றது.

திருமணம் மற்றும் சமூக நிகழ்ச்சிகளில் மேளம்

தமிழர்களின் திருமணங்களில் மேளத்திற்குத் தனித்துவமான இடம் உண்டு. குறிப்பாக, "கெட்டி மேளம்" என்பது திருமணச் சடங்குகளுடன் நெருங்கிய தொடர்புடையது. மணமகன், மணமகளுக்குத் தாலி கட்டும் முக்கிய தருணத்தில் மேளம் முழங்குவது இன்றும் பல திருமணங்களில் காணப்படும் வழக்கமாகும். திருமணத்திற்கு மட்டுமல்லாமல், காதணி விழா, மஞ்சள் நீராட்டு விழா, வீட்டு விழா, ஊர்வலம், கோவில் திருவிழா போன்ற பல நிகழ்ச்சிகளிலும் நாதஸ்வரம்-தவில் இசை பயன்படுத்தப் படுகிறது.

பெரிய மேள இசை திருமணம், காதணி விழா, வீடுபுகுதல், கோவில் சடங்கு போன்ற பல வாழ்க்கைச் சடங்குகளுடன் தொடர்புடையதாக இருந்ததை ஆய்வுகள் பதிவு செய்கின்றன. இதனால், மேளம் தமிழர்களின் வாழ்க்கையில் ஓர் இசைக்கருவியாக மட்டுமல்லாமல், மங்களத்தின் அடையாளமாகவும் கருதப்படுகிறது.

நாட்டுப்புறக் கலையில் மேளம்

மேளம் நாட்டுப்புறக் கலைகளிலும் முக்கியப் பங்கு வகிக்கிறது. நையாண்டி மேளம், உருமி மேளம், பறை மேளம் போன்ற பல வடிவங்கள் கிராமப்புற விழாக்கள், கோவில் திருவிழாக்கள், ஊர்வலங்கள் மற்றும் நாட்டுப்புற நடனங்களுடன் இணைந்துள்ளன. பறை மேளம் குறிப்பாகத் தமிழர் பண்பாட்டின் முக்கியமான பழமையான தாள மரபுகளில் ஒன்றாகும். சங்ககாலத்திலிருந்து பறை பல்வேறு சமூக மற்றும் சடங்கு நிகழ்வுகளில் பயன்படுத்தப்பட்டதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. பின்னர் சமூக மாற்றங்களின் காரணமாக அதன் பயன்பாடும் சமூகப் பார்வையும் மாறினாலும், சமகாலத்தில் பறை இசை மீண்டும் கலை மற்றும் பண்பாட்டு அடையாளத்தின் ஒரு முக்கிய வடிவமாகப் பார்க்கப்படுகிறது.

நவீன காலத்தில் மேளத்தின் வளர்ச்சி

20ஆம் நூற்றாண்டில் இசைத்துறையில் பல மாற்றங்கள் ஏற்பட்டன. மேளம் கோவில் மற்றும் திருமண நிகழ்ச்சிகளுக்குள் மட்டுமே இருந்த நிலை மாறி, மேடை நிகழ்ச்சிகள், இசை விழாக்கள், கலாச்சார நிகழ்ச்சிகள் மற்றும் திரைப்பட இசை போன்ற பல துறைகளிலும் இடம்பெறத் தொடங்கியது. குறிப்பாக, நாதஸ்வரம்-தவில் இணைப்பு கர்நாடக இசை நிகழ்ச்சிகளிலும் இடம்பெறத் தொடங்கியது. பெரிய மேளம் கோவில் சடங்கு இசையுடன் மட்டும் மட்டுப்படாமல், இசை மேடைகளிலும் அறிமுகமானது. திரைப்படங்களிலும் தவில் போன்ற தாளக் கருவிகள் பயன்படுத்தப் பட்டுள்ளன. இதன்மூலம் பாரம்பரிய மேளத்தின் ஒலி புதிய தலைமுறையினரையும் சென்றடைந்தது.

இன்றைய காலத்தில் மேளம்

இன்றைய காலத்தில் மேளம் பாரம்பரியத்தையும் நவீனத்தையும் இணைக்கும் இசை வடிவமாகத் திகழ்கிறது. கோவில் திருவிழாக்கள், திருமணங்கள் போன்ற பாரம்பரிய நிகழ்ச்சிகளில் அதன் பயன்பாடு தொடர்கிறது. அதே சமயம், பள்ளிகள், கல்லூரிகள், கலை அமைப்புகள் மற்றும் பண்பாட்டு விழாக்களிலும் பறை, தவில், உருமி போன்ற கருவிகளைக் கற்றுக் கொடுத்து நிகழ்ச்சிகள் நடத்தப்படுகின்றன.

பறை மேளம் போன்ற சில மரபுகள் நவீன சமூகத்தில் தொடர்ந்து நிலைத்திருக்க, அவற்றை ஆவணப் படுத்துதல், புதிய தலைமுறையினருக்குப் பயிற்சி அளித்தல், கலைக் கல்வி நிறுவனங்களில் அறிமுகப்படுத்துதல் போன்ற நடவடிக்கைகள் தேவைப்படுகின்றன என்று ஆய்வுகள் சுட்டிக்காட்டு கின்றன. இவ்வாறு, மேளத்தின் வளர்ச்சி என்பது கருவியின் வடிவத்தில் ஏற்பட்ட மாற்றம் மட்டுமல்ல. அதன் பயன்பாடு, இசை நிகழ்த்தும் முறை, சமூகப் பங்கு மற்றும் பண்பாட்டு முக்கியத்துவம் ஆகிய அனைத்திலும் ஏற்பட்ட மாற்றங்களின் தொகுப்பாகும்.

முடிவுரை

மேளம் தமிழர்களின் தொன்மையான இசை மரபின் முக்கியமான அடையாளமாகும். சங்ககாலத் தாளக் கருவி மரபிலிருந்து தொடங்கி, கோவில் வழிபாடு, அரச மரபுகள், பக்தி இயக்கம், திருமணச் சடங்குகள், நாட்டுப்புறக் கலைகள் எனப் பல்வேறு காலகட்டங்களைக் கடந்து அது வளர்ந்துள்ளது. பறை போன்ற பழமையான தாளக் கருவிகள் தகவல்தொடர்பு மற்றும் சமூக நிகழ்வுகளில் முக்கியப் பங்கு வகித்தன. பின்னர் தவில்-நாதஸ்வரம் இணைந்த பெரிய மேளம் கோவில் மற்றும் மங்கள நிகழ்ச்சிகளின் முக்கிய இசை வடிவமாக உருவெடுத்தது. இன்றும் மேளம் தமிழர் பண்பாட்டின் உயிரோட்டமான அடையாளமாகத் தொடர்கிறது. காலம் மாறினாலும், அதன் தாள ஒலி தமிழர்களின் விழா, வழிபாடு, மகிழ்ச்சி மற்றும் பண்பாட்டு நினைவுகளோடு தொடர்ந்து பயணிக்கிறது. எனவே, மேள இசையைப் பாதுகாப்பதும், அதன் வரலாற்றை அடுத்த தலைமுறைக்குக் கொண்டுசெல்வதும் தமிழர் இசைப் பாரம்பரியத்தைப் பாதுகாப்பதற்கு மிகவும் அவசியமானதாகும்.

குழந்தைகளின் ஓவியங்கள்



ஆதவ் விஜயானந்த்



இராம் பிரணவ் கணேஷ்



இனியாள் ஆனந்தகுமார்



கபிலன் தினேஷ்குமார்



கவின் விஸ்வசாரதி




சம்யுக்தா அஜித்




சர்விக் குமார்



தக்சன் குமார்



தக்ஷா கணேஷ்



திவ்யஸ்ரீ



தீசா சதீஷ்குமார்



நக்சத்ரா



நிக்ஷித் கணேசமூர்த்தி




ஸ்வேதா
ஜனார்த்தனன்



நிறைமதி
இராஜேஷ்குமார்




மான்யா மதனகோபால்



மிதுன் ஹர்ஷா



மோசிகா இராஜேஷ்குமார்



ஹாசினி விஸ்வசாரதி

எங்கள் கோடை விடுமுறை

பிரடெரிக் தமிழ்ப்பள்ளி மாணவர்கள், மேரிலாந்து.



செல்வன் அருள் இரத்தினம்



இந்தக் கோடையில் நான் ஒரு மாநில அளவிலான கிரிக்கெட் போட்டியில் கலந்து கொண்டேன். இந்தப் போட்டி நியூஜெர்சியில் நடைபெற்றது. நான் வர்ஜீனியா மற்றும் மேரிலாந்து மாநிலங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடினேன். இரண்டு மாநிலங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தியது எனக்கு மிகவும் பெருமையாகவும் மகிழ்ச்சியாகவும் இருந்தது. இந்தப் போட்டியில் பல புதிய வீரர்களைச் சந்தித்தேன். அவர்களுடன் சேர்ந்து விளையாடியது ஒரு நல்ல அனுபவமாக இருந்தது.

இந்தப் போட்டியின் மூலம் பல புதிய நண்பர்களை உருவாக்கிக்கொண்டேன். அவர்கள் வெவ்வேறு இடங்களில் இருந்து வந்திருந்தாலும், கிரிக்கெட் எங்களை ஒன்றாக இணைத்தது. நாங்கள் ஒன்றாகப் பயிற்சி செய்து, போட்டிகளில் விளையாடி, ஓய்வு நேரங்களில் பேசிக்கொண்டோம். ஒருவருக்கொருவர் ஊக்கமளித்து, போட்டிகளில் சிறப்பாக விளையாட முயற்சி செய்தோம். அவர்களுடன் நேரம் செலவிட்டது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. போட்டிகளுக்கு முன்பு நாங்கள் ஒன்றாகப் பயிற்சி செய்து, போட்டிகளுக்குப் பிறகு எங்கள் அனுபவங்களைப் பகிர்ந்து கொண்டோம். சில வீரர்களுடன் கிரிக்கெட்டைத் தவிர மற்ற விஷயங்களைப் பற்றியும் பேசினேன். இதனால் எங்களுக்குள் நல்ல நட்பு ஏற்பட்டது.

இந்தப் போட்டியில் விளையாடியதன் மூலம் கிரிக்கெட்டில் பல புதிய விஷயங்களையும் கற்றுக்கொண்டேன். வெற்றி பெறுவதற்கு அணியாக இணைந்து செயல்படுவது மிகவும் முக்கியம் என்பதைப் புரிந்துகொண்டேன். போட்டி முடிந்த பிறகு வீட்டிற்குத் திரும்பும்போது, இந்தப் பயணத்தில் கிடைத்த அனுபவங்களை நினைத்து மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இந்தக் கிரிக்கெட் போட்டி என் கோடை விடுமுறையில் ஒரு மறக்க முடியாத அனுபவமாக அமைந்தது. புதிய நண்பர்களையும் நல்ல நினைவுகளையும் பெற்றதால், இந்தக் கோடை விடுமுறை எனக்கு மிகவும் சிறப்பானதாக இருந்தது.

KALPASI
INDIAN CUISINE
FLAVORS OF CHETTINAD



செல்வி மீனாட்சி காசி



கோடை விடுமுறையில், நான் என் குடும்பத்துடன் நியூயார்க் நகரத்திற்குச் சென்றேன். நாங்கள் அங்கு மூன்று நாட்கள் விடுதியில் தங்கினோம். விடுதியில் இருந்த நீச்சல் குளத்தில் என் குடும்பத்துடன் மிகவும் மகிழ்ச்சியாக விளையாடினேன். நாங்கள் நியூயார்க்கில் பல அழகான இடங்களுக்குச் சென்றோம். முதலில் Oculus சென்றோம். அங்குள்ள கட்டிடம் மிகவும் அழகாகவும் வித்தியாசமாகவும் இருந்தது. அங்கு பல இடங்களைச் சுற்றிப் பார்த்தோம். பிறகு Vanderbilt Summit சென்றோம். அங்கிருந்து நியூயார்க் நகரத்தின் அழகான கட்டிடங்களையும் அழகான காட்சிகளையும் பார்த்தோம். அந்த இடம் எனக்கு மிகவும் பிடித்திருந்தது. மொத்தத்தில், இந்தப் பயணம் ஒரு இனிய அனுபவமாக இருந்தது.

செல்வன் பிரணவ் குமரேசன்




நான் ஹர்ஷி பூங்காவிற்குப் போனேன். அங்கேயே சாக்லேட் எப்படி தயாரிக்கப்படுகிறது என்பதை ஒரு இலவச சவாரி மூலம் பார்த்தேன். மிகவும் புதுமையாக இருந்தது. அந்தச் சவாரியில் சென்றது நல்ல அனுபவமாக இருந்தது. மேலும், சாக்லேட் தயாரிக்க வேண்டிய மூலப்பொருட்களைப் பற்றி அறிந்தேன். சவாரியின் இறுதியில் இலவசமாக சாக்லேட் கொடுத்தார்கள். சுவையாக இருந்தது. அடுத்து, மற்றொரு நாள் க்ரீன் ப்ரையர் மைதானத்தில் பூங்காவிற்கு நண்பர்கள் மற்றும் குடும்பத்தினருடன் சென்றேன். அங்கே அடர்ந்த மரங்கள், புல்வெளிகள், ஏரிகள் பார்க்க மிகவும் அழகாக இருந்தன. மேலும், ஏரியில் குளித்து நீச்சல் அடித்தோம். கோழி சுட்டு சாப்பிட்டோம். விளையாடினோம். மகிழ்ச்சியுடன் நேரத்தைப் போக்கினோம்.

ஆறு வித்தியாசங்கள்

செல்வி கீர்த்தனா கணேஷ்





விடைகள் 28 ஆம் பக்கம் பார்க்கவும்



செல்வன் வ்ரிஷாங் சீனிவாசன்



இந்தக் கோடை விடுமுறையில் நான் பல நல்ல அனுபவங்களைப் பெற்றேன். முதலில், நான் தன்னார்வ சேவையாகச் சின்னக் குழந்தைகளுக்குக் கணிதமும் வாசிப்பும் சொல்லிக் கொடுத்தேன். சில குழந்தைகளுக்கு வேடிக்கையான activities மூலம் coding-ம் கற்றுக் கொடுத்தேன். மற்ற நேரங்களில் என் நண்பர்களுடன் வெளியே விளையாடினேன், நீச்சல் அடித்தேன், சைக்கிள் ஓட்டினேன். சில நாட்கள் நண்பர்களுடன் வெளியேயும் சென்றேன்.

ஜூலை மாதத்தில் நான் என் அம்மா, அப்பா மற்றும் தம்பியுடன் இந்தியாவுக்குச் சென்றேன். இந்த வருடம் என் தாத்தா-பாட்டியின் சதாபிஷேகம் நடைபெற்றது. என் தாத்தாவின் 81-வது பிறந்தநாளை முன்னிட்டு, திருக்கடையூரில் எங்கள் உறவினர்களுடன் சேர்ந்து அதைச் சிறப்பாகக் கொண்டாடினோம்.

முதலில் சென்னை மற்றும் திருவள்ளுவர் கோட்டம் போன்ற சில இடங்களுக்குச் சென்றோம். பிறகு திருக்கடையூருக்குச் சென்று, ஸ்ரீமூகாம்பிகை ரெசிடென்சியில் மூன்று நாட்கள் தங்கினோம். அங்கு என் உறவினர்கள், cousins மற்றும் சின்னக் குழந்தைகளைச் சந்தித்தேன். அவர்களுடன் விளையாடியும் பேசிக்கொண்டும் இருந்தது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. கோவிலில் நடந்த பூஜை மற்றும் சதாபிஷேக நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டேன். அங்கு இட்லி, தோசை, வடை, சாம்பார் சாதம் போன்ற பல சுவையான உணவுகளையும் சாப்பிட்டோம்.

இந்தியாவில் அதிக நாட்கள் தங்க முடியவில்லை, ஏனென்றால் எங்களுக்கு வேறு சில கல்வி சம்பந்தமான வேலைகளும் இருந்தன. இருந்தாலும், இந்தக் கோடை விடுமுறை எனக்குப் பல புதிய அனுபவங்களையும் மறக்க முடியாத நினைவுகளையும் கொடுத்தது.

செல்வி ஸ்வேதா ஜனார்த்தனன்



இந்த ஆண்டு கோடை விடுமுறை எனக்கு புதிய அனுபவமாக இருந்தது. என்னுடைய தாத்தாக்கள் வந்து இருந்தார்கள், அவர்களுடன் பல இடங்களுக்கு சுற்றுலா சென்றேன். நான் நியூயார்க் சென்று அங்குள்ள வீதிகளை இரவில் கண்டு இரசித்தேன், அப்பொழுது உலகக்கோப்பை கால்பந்துப் போட்டி நடைபெற்றது. இரண்டு நாள் நியூஜெர்சியில் தங்கிய பிறகு, அடுத்த இடத்திற்குச் செல்ல எங்கள் குடும்பம் முடிவு செய்தது. அடுத்ததாக நாங்கள் கன்னிங்காம் நீர்வீழ்ச்சிக்குச் சென்றோம். அந்த இடத்தின் இயற்கைக் காட்சிகள் மிகவும் அழகாக இருந்தன. சிறியதாக இருந்தாலும் அழகான அந்த அருவியின் அருகில் ஏறிச் சென்றோம். எங்கள் பயணங்களுக்கு நடுவில், நான் சாரா ஜெ. மாஸ் எழுதிய "த்ரோன் ஆப் க்ளாஸ்" புத்தகங்கள் படித்தேன், மிகவும் நன்றாக இருந்தன. மேலும், வீட்டில் இருந்தபோது எனக்கு ஓவியம் வரைவதற்கும் நேரம் கிடைத்தது. கோடை விடுமுறையில் நான் மூன்று இயற்கைக் காட்சிகளை வரைந்தேன். என் அப்பாவின் நண்பர் குடும்பம் எங்கள் வீட்டிற்கு வந்தனர். நாங்கள் அனைவரும் ஒன்றாக நள்ளிரவு வரை சீட்டு விளையாட்டை விளையாடினோம். அது மறக்க முடியாத நினைவாக இருந்தது. இந்தக் கோடை விடுமுறை எனக்குப் பல நல்ல நினைவுகளைத் தந்தது.

செல்வன் அல்தின் அலாவுதீன்



இந்த விடுமுறையில் என் தாத்தா பாட்டி எங்கள் வீட்டிற்கு வந்தார்கள். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.

அவர்களின் வாழ்க்கை அனுபவங்களை என்னிடம் பகிர்ந்து கொண்டனர். நாங்கள் குடும்பமாக வாஷிங்டன் டி.சி, நியூயார்க் மற்றும் நியூஜெர்சி சென்று வந்தோம்.மேலும் இந்த விடுமுறையில் விருப்பப் பாடப் பிரிவில் உடற்பயிற்சி மற்றும் விளையாட்டுக் கல்வி படித்து 98 சதவிகித மதிப்பெண் பெற்றுத் தேர்ச்சி அடைந்தேன். என் கணித ஆசிரியர் நான் என்னுடைய ஏபி தேர்வில் நல்ல மதிப்பெண் எடுத்ததற்காக என்னைப் பாராட்டி கடிதம் எழுதினார். எனக்கு மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இந்தக் கோடை விடுமுறையில் என் பள்ளி நண்பர்களின் நினைவுகளால் வாடினேன்.



செல்வி ஐஸ்வர்யா ஸ்ரீசத்யநாராயணன்



என் கோடை விடுமுறையில் நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன். முதலாக நானும் என் நண்பர்களும் இண்டியானா சென்றோம். அங்கு, நான் ஒரு அருங்காட்சியகம் பார்த்தேன். அந்த அருங்காட்சியகத்தில் விமானம் மற்றும் விண்கலங்கள் இருந்தன. அதன் பிறகு, எனது பிறந்தநாளைக் கொண்டாட நான் பிறந்த ஊர் சென்று, என் நண்பர்களுடன் ஒரு உணவகத்திற்குச் சென்றோம். திரும்பி வந்த பிறகு நான் மூன்று வாரங்களுக்கு ஒரு கோடை கால முகாமுக்குச் சென்றேன். அங்கே நான் அறை நறுமணம் தயாரிப்பது மற்றும் விலங்குகள் பார்ப்பது போன்ற காரியங்களைச் செய்தேன். அந்த முகாமை முடித்த பிறகு நான் மிர்ட்டல் கடற்கரைக்கு ஒரு பயணம் சென்று, கடலையும் போர்ட் வாக்கையும் பார்த்தேன். அங்கே இருந்தபோது தென் கரோலினாவில் வசிக்கும் என் உறவினர்களைப் பார்த்தேன். நான் திரும்பி வந்து நண்பர்களுடன் பொழுதைக் கழித்து, புத்தகங்களைப் படித்தேன்.

செல்வன் பாலஸ்கந்தன் இராஜ்மோகன்



வணக்கம், என் கோடை விடுமுறை அனுபவங்களைப் பகிர்ந்து கொள்வதில் மகிழ்ச்சி கொள்கிறேன்.. போன வருடம் முழுவதும் ஓடி ஓடி விழுந்து விழுந்து படித்து tired ஆனதால் முதல் வாரம் முழுவதும் ஓய்வு எடுத்தேன்.. இரண்டாவது வாரத்தில் விடுமுறை வேட்டை ஆரம்பம் .. நியூஜெர்சி, நியூயார்க், விர்ஜீனியா போனோம் .. நிறைய zoo, statue of liberty, farms, நிறைய கோவில்கள் பார்த்து இரசித்தேன். வீடு திரும்பிய பிறகு கற்றல் வேட்டை ஆரம்பம் .. அம்மாவிடம் சில recipe சமைக்கக் கற்றுக்கொண்டேன்.. அப்பாவிடம் சில தெய்வதுதிகள் கற்றுக்கொண்டேன்.. பாட்டியிடம் பாட்டு.. 3 வாரத்தில் 3 வர்ணம் என்று target வைத்துப் பாடினேன் (படுத்திவிட்டேன்).. மாமாவிடம் கணக்கு tricks, tips கற்றுக்கொண்டேன் (அடுத்த வருட calculus கண்ணை மறைக்காது).. தாத்தாவிடம் பல ஆன்மீகக் கதைகள், வாழ்க்கை அனுபவக் கதைகள் கேட்டுக் கொண்டேன்.. Youtube பார்த்து சில recipes செய்து அப்பா அம்மாவை surprise செய்தேன். summer declutter மற்றும் புது school yearக்கு purchase செய்தேன்.. அடுத்த வருடம் இன்னும் வேகமாக ஓடி target அடையனும் அதனால் விடுமுறையின் கடைசி சில நாட்கள் ஓய்வு எடுத்துக் கொண்டேன். இப்படியாக "என் கோடை விடுமுறை" சென்றது..நன்றி!

செல்வி சோனாக்க்ஷி குருநாதன்



எனது கோடை விடுமுறையின் போது, நான் மேற்குக் கடற்கரைக்குச் சென்றேன். நாங்கள் முதலில் நெவாடாவில் உள்ள லாஸ் வேகாஸுக்குச் சென்று, அங்குள்ள அனைத்து இடங்களையும் சுற்றிப் பார்த்தோம். அங்கிருந்து, அரிசோனாவில் உள்ள கிராண்ட் கேன்யனின் மேற்குப் பகுதிக்குச் சென்றோம். நாங்கள் லாஸ் வேகாஸுக்குத் திரும்பி வந்து, பின்னர் லாஸ் ஏஞ்சல்ஸுக்குச் சென்றோம். வழியில், செவன் மேஜிக் மவுண்டன்ஸ் என்றழைக்கப்படும் இடத்திற்குச் சென்றோம். அங்கு, நாங்கள் ஹாலிவுட் வாக் ஆஃப் ஃபேம், கிரிஃபித் வானியல் ஆய்வகம் ஆகியவற்றைப் பார்வையிட்டு, ஹாலிவுட் அடையாளச் சின்னத்தையும் பார்த்தோம். நாங்கள் அங்குள்ள யுனிவர்சல் மற்றும் டிஸ்னிலேண்டிற்கும் சென்றோம். அதன் பிறகு, நாங்கள் சான் டியாகோவிற்கு காரில் சென்று சஃபாரி சென்றோம். அடுத்த நாள், நாங்கள் சீவேர்ல்ட் மற்றும் லா ஜோலாவிற்கும் சென்றோம். இறுதியாக, நாங்கள் சான் டியாகோ உயிரியல் பூங்காவிற்குச் சென்று, பின்னர் விமானத்தில் வீட்டிற்குத் திரும்பினோம்.நாங்கள் வீட்டில் இருந்த நாட்களில், நான் நிறைய புத்தகங்களைப் படிப்பேன். என் நண்பர்களுடன் விளையாடினேன். நான் சில கோடைகால முகாம்களுக்குச் சென்றேன், அங்கு அறிவியல் மற்றும் கோடிங் கற்றுக்கொண்டேன். நாங்கள் வாஷிங்டன் டி.சி.யில் உள்ள சில நண்பர்களுடன் ஸ்பை மியூசியத்திற்குச் சென்றோம். கோடை விடுமுறையின்போது நான் செய்த விஷயங்கள் இவை. நான் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தேன்!



செல்வி கயல் பிரேம்குமார்



இந்தக் கோடைக்காலத்தில் நான் இந்தியாவுக்கும் பாரிஸுக்கும் சென்றேன். இந்தப் பயணம் என் வாழ்நாளில் மறக்க முடியாத நினைவுகளைத் தந்தது. என் குடும்பத்துடன் சேர்ந்து சென்ற, இந்தியாவைத் தவிர்த்த முதல் வெளிநாட்டுப் பயணம் இதுதான் என்பதால், அது எனக்கு மிகவும் சிறப்பாக இருந்தது.

என் பாட்டியின் திவசத்திற்காக நாங்கள் இந்தியா சென்றோம். பயணத்திற்கான காரணம் வருத்தமான தாக இருந்தாலும், நீண்ட நாட்களாகப் பார்க்காத குடும்பத்தினரைச் சந்திக்க முடிந்ததால் எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

இந்தியாவில் முதலில் நாங்கள் என் மாமா, அத்தை, அத்தான் மற்றும் அத்தாச்சியுடன் திருநள்ளாற்றில் தங்கினோம். நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு அவர்களுடன் நேரம் செலவிட்டது மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது. இந்தியாவில் இருந்தபோது கங்கைகொண்ட சோழபுரம், குற்றாலம், கன்னியாகுமரி மற்றும் மதுரை ஆகிய இடங்களுக்குச் சென்றோம். அங்கு பெரிய அருவிகளையும் அழகான கோயில்களையும் பார்த்தோம். ஒவ்வொரு இடமும் வித்தியாசமாக இருந்ததால், ஒவ்வொரு நாளும் ஒரு புதிய சாகசம் போல இருந்தது.

எங்கள் சாலைப் பயணத்திற்குப் பிறகு, சென்னையில் உள்ள என் அப்பாவின் குடும்பத்தினரைச் சந்தித்தோம். சென்னையில் நாங்கள் கடைகளுக்குச் சென்றோம், பலவிதமான உணவுகளைச் சாப்பிட்டோம், பல ஆண்டுகளாகப் பார்க்காத உறவினர்களைச் சந்தித்தோம்.

என் அம்மாவின் குடும்பத்தினரும் என் அப்பாவின் குடும்பத்தினரும் ஒருவருக்கொருவர் மிகவும் வித்தியாசமாக இருந்தது எனக்கு சுவாரஸ்யமாக இருந்தது. இரண்டு குடும்பத்தினரும் என்னை வீட்டில் இருப்பது போல உணரச் செய்தனர்.

சென்னையில் என் பாட்டியின் திவசம் நடைபெற்றது. அது மிகவும் சோகமான நிகழ்ச்சியாக இருக்கும் என்று நான் நினைத்திருந்தேன். ஆனால் அங்கு அனைவரும் பேசிக்கொண்டும் சிரித்துக் கொண்டும் ஒன்றாக நேரம் செலவழித்துக்கொண்டும் இருந்தனர். முதலில், அப்படி ஒரு நேரத்தில் சிரிப்பது சரியா என்று எனக்கு சந்தேகமாக இருந்தது. ஆனால் பின்னர், அது மரியாதை குறைவானது அல்ல என்பதைப் புரிந்துகொண்டேன். அனைவரும் மகிழ்ச்சியாக இருப்பதன் மூலம் என் பாட்டியை நினைவுகூர்வது போல இருந்தது. அந்த விஷயத்தை நான் எப்போதும் நினைவில் வைத்திருப்பேன்.

இந்தியாவிலிருந்து நாங்கள் பாரிஸுக்குச் சென்றோம். பாரிஸ் எனக்கு முற்றிலும் ஒரு புதிய உலகம் போலத் தோன்றியது. அழகான கட்டிடங்களையும் புகழ்பெற்ற இடங்களையும் பார்த்தேன். முன்பு படங்களில் மட்டுமே பார்த்த மோனாலிசா ஓவியத்தையும் ஈஃபிள் கோபுரத்தையும் நேரில் பார்த்தேன். அது மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

நாங்கள் என் பெரியப்பாவின் வீட்டில் தங்கினோம். அவர்கள் எங்களை மிகவும் அன்பாக வரவேற்றனர். அதனால், பாரிஸில் இருந்த நேரம் இன்னும் சிறப்பாக இருந்தது. பாரிஸைச் சுற்றிப் பார்த்தது என் கோடைக் காலத்தில் எனக்கு மிகவும் பிடித்த அனுபவங்களில் ஒன்றாக இருந்தது.

சீக்கிரமாக வீடு திரும்ப வேண்டிய நேரம் வந்து விட்டது. நான் வீடு திரும்பியவுடன் பள்ளி தொடங்கியது. பள்ளிக்குச் செல்ல எனக்கு மகிழ்ச்சியாக இருந்தது. ஆனால் கோடை விடுமுறை இன்னும் கொஞ்சம் நீடித்திருக்கலாம் என்று நினைத்தேன்.

இந்தக் கோடைக்காலத்தில் நான் பல அற்புதமான விஷயங்களை உணர்ந்தேன். ஆனால் இந்தப் பயணத்தை மிகவும் சிறப்பாக்கியது இடங்கள் அல்ல, அங்கிருந்த மனிதர்கள்தான். நான் என் பயணத்தின் போது, இதற்கு முன்பு பார்த்திராத இடங்களைப் பார்த்தேன், நீண்ட நாட்களாகப் பார்க்காத குடும்பத்தினருடன் மீண்டும் நேரம் செலவிட்டேன். எல்லாவற்றுக்கும் மேலாக, உலகின் வெவ்வேறு பகுதிகளில் குடும்பத்தினர் இருப்பது எவ்வளவு சிறப்பானது என்பதை இந்தக் கோடைக்காலம் எனக்கு உணர்த்தியது.

செல்வி ஜனனி முருகராஜ்



இந்தக் கோடைக் கால விடுமுறையில் நான் செய்த மூன்று முக்கிய செயல்களைக் கூற விரும்புகிறேன். நான் கோடைக்கால சிறப்புப் பயிற்சி முகாம் ஆறாம் வகுப்பு மாணவர்களுக்கு நான்கு வாரங்களுக்கு நடத்தினேன். இப் பயிற்சி முகாமில் கணிதம், அறிவியல் சோதனைகள் மற்றும் சமையல் போன்ற வகுப்புகளை நடத்தினேன். நான் கோடைக் கால சிறப்புப் பயிற்சி முகாமிற்கு பத்து நாட்கள் எனது சாரணர் இயக்கத்திலிருந்து சென்றேன். ஹெர்ஷீ பூங்கா சென்று எல்லா விதமான பெரிய சவாரிகளையும் செய்து மகிழ்ந்தேன்.

இ்வாட்டி
iPaatti

Chantilly, VA
Saturdays

கூடு

செயல்வழிக் கல்வி | கலைவழிக் கல்வி
ACTIVITY-BASED LEARNING | TRADITIONAL ART FORMS

தனித்துவமான தமிழ்ப் பள்ளி!

Now Hiring Tamil Teachers!

Learn to Speak. Read. Write. Tamil the joyful way!

- தற்காப்புக் கலைகள்
- மரபுக் கலைகள்
- கதைகள்
- கணிதம்
- வாழ்வியல் செயல்பாடுகள்
- பாடல்கள் + விளையாடுகள்

Age 3 to 14 Years Old



SCAN
ENROLL NOW

+1 (703) 966-1633
+1 (703) 901-7904
ipaatti.us



செல்வி ஹாசினி விஸ்வசாரதி



என் கோடைக்கால விடுமுறையில் நான் கிரேட் ஸ்மோக்கி மலைக்கு என் குடும்பம் மற்றும் நண்பர்களுடன் சென்றேன். நாங்கள் 16 பேர் மகிழ்ச்சியில் சென்றோம். அங்கு செல்ல 6 மணி நேரம் ஆகியது. நாங்கள் அங்கு மலை மேல் உள்ள ஒரு பெரிய வீட்டில் தங்கினோம். நாங்கள் 8 குழந்தைகளும் ஒரே அறையில் தங்கினோம்.முதல் நாள் நாங்கள் “The Island of Pigeon Forge”க்கு சென்றோம். அங்கே நாங்கள் லைட் ஷோ, நீரூற்று நிகழ்ச்சி, மற்றும் இராட்டினம் பார்த்தோம். இரண்டாவது நாள், நாங்கள் “Anakeesta” சென்றோம். அங்கு உயர்ந்த மலைகளைப் பார்த்து இரசித்தோம் மேலும் நாங்கள் அங்கு பல சவாரிகள் சென்றோம். மூன்றாவது நாள், நாங்கள் “Skypark Gatlinburg” சென்றோம். அங்கே நாங்கள் ஒரு கண்ணாடிப் பாலத்தில் நடந்து சென்று கருப்புக் கரடிகளைப் பார்த்து இரசித்தோம். அடுத்து நாங்கள் “The Lost Sea” சென்றோம். அது ஒரு குகைகள் இருக்கும் ஏரி, அதில் படகில் சுற்றிப் பார்த்தோம். கடைசி நாள் நாங்கள் Titanic அருங்காட்சியகம் பார்த்தோம். அன்று இரவே நாங்கள் வீடு திரும்பினோம். இந்தக் கோடை விடுமுறைப் பயணம் மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது.



செல்வி ஓவியா சிவராமன்

கோடை விடுமுறைக்காக நான் என் குடும்பத்தினருடன் இந்தியா சென்றேன். அங்கு நான் ஐந்து வாரங்கள் என் உறவினர்களுடன் தங்கினேன். என் பெற்றோர்களின் கல்யாண நாளுக்கு இரண்டு நாட்களுக்கு கேரளாவில் இருந்தோம். திரும்ப அமெரிக்காவுக்கு வந்தவுடன் நான் என் நண்பர்களுடன் வெளியே சென்றேன். சில நாட்களுக்கு என் நண்பர்களுடன் நீச்சல் குளத்திற்கும் சென்றேன். நான் ஒரு நாள் ஆஞ்சநேயர் கோவிலில் இளையராஜாவை பார்த்தேன். இந்தியாவிலிருந்து வாங்கிட்டுவந்த இனிப்புகள் சாப்பிட்டு மகிழ்ந்தேன். பள்ளிக்கூடம் ஆரம்பிக்கும் முன்பு துணிகள் வாங்கினேன்.

CHENNAI EXPRESS
RESTAURANT & CATERING
www.chennaiexpressva.com



செல்வி ஜான்வி ஜெயமஹேஸ்வரன்



கோடை விடுமுறை என்றாலே அனைவருக்கும் ஒரு தனி மகிழ்ச்சி உண்டு. அந்த வகையில், இந்த ஆண்டு எனது கோடை விடுமுறையைக் கொண்டாடுவதற்கு நான் எனது குடும்பத்துடன் கனடா நாட்டிற்குப் பயணம் செய்தேன். கனடா அதன் இயற்கை அழகுக்கும், சுத்தமான நகரங்களுக்கும் பெயர் பெற்றது. நாங்கள் முதன்மையாக கனடாவின் புகழ்பெற்ற நயாகரா நீர்வீழ்ச்சியை காணச் சென்றோம். அங்குள்ள நீரின் மாபெரும் சத்தமும், அதன் அழகும் என்னை வியப்பில் ஆழ்த்தியது. இரவில் வண்ண விளக்குகளால் ஒளிரும் நீர்வீழ்ச்சியைப் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. மேலும், அங்கே உள்ள பனிமூடிய மலைகளும், பசுமையான காடுகளும் மனதிற்கு அமைதியைத் தந்தன.

நாங்கள் அடுத்து டொராண்டோ நகரத்திற்குச் சென்றோம். அங்கே உள்ள சி.என் கோபுரம் உச்சியில் இருந்து டொராண்டோ நகரத்தின் முழு அழகையும் கண்டுகளித்தோம். சி.என் கோபுரத்தின் அருகிலேயே அமைந்துள்ள ரிப்ளியின் மீன்வலாக்கியம், கடல் வாழ் உயிரினங்களைக் காணச் சிறந்த இடமாகும். குறிப்பாகக் கோடையில் குடும்பத்துடனும், குழந்தைகளுடனும் செல்ல ஏற்றது. நகரத்தின் பரபரப்பிலிருந்து ஒதுங்கி, அமைதியாகக் கோடையைக் கழிக்கச் சிறந்த இடம் டொராண்டோ தீவுகள் ஆகும். இதயம் கவரும் ஒண்டாரியோ ஏரியில் படகு மூலம் இத்தீவிற்குச் செல்லலாம். இங்கு அழகான கடற்கரைகள், மிதிவண்டி ஓட்டும் பாதைகள் மற்றும் குழந்தைகளுக்கான பொழுதுபோக்கு பூங்காக்கள் உள்ளன. கோடைகால வெயிலைத் தணிக்க மக்கள் இங்கு நீந்தி மகிழ்கின்றனர். பழங்கால செங்கல் கட்டிடங்கள் நிறைந்த வரலாற்றுச் சிறப்புமிக்க பகுதி டிஸ்டில்லரி மாவட்டம் ஆகும். கோடைகாலத்தில் இங்கு திறந்த வெளி உணவகங்கள், கலைக் கண்காட்சிகள் மற்றும் இசை நிகழ்ச்சிகள் அதிகம் நடைபெறும்.

கனடா நாட்டின் குளிர்ந்த நிலையும், மக்களின் அன்பான உபசரிப்பும் என் உள்ளத்தைக் கவர்ந்தன. இந்தக் கோடை விடுமுறை எனக்கு வெறும் பொழுதுபோக்காக மட்டும் இல்லாமல், பல புதிய இடங்களை அறிந்துகொள்ளவும் ஒரு சிறந்த வாய்ப்பாக அமைந்தது. என் வாழ்நாளில் இந்தப் பயணம் என்றும் நிலைத்திருக்கும் இனிய நினைவாகும்.

ஆறு வித்தியாசங்கள்

விடைகள்





செல்வன் பிரனீத் இராஜா




என் கோடை விடுமுறை மிகவும் அருமையாக மற்றும் முக்கியாமானதாக இருந்தது. ஏன் என்றால் இந்தக் கோடை விடுமுறைக்கு நான் எனது பிறந்த ஊரான வேலென்சியா, கலிபோர்னியா என்ற ஊருக்கு 15 வருடங்களுக்குப் பிறகு மீண்டும் சென்றேன் மற்றும் நான் பிறந்த மருத்துவமனையையும் சுற்றிப் பார்த்தேன். அது தவிர நான் ஹாலிவுட், கிரிஃபித் வான் ஆய்வகம், சாந்தமொனிக்கா, வெனிஸ் கடற்கரைகள், மலிபு கோவில், கிராண்ட் கேன்யான், லாஸ்வேகஸ் ஆகிய இடங்களைச் சுற்றிப் பார்த்தேன். அதனால் இந்தக் கோடை விடுமுறை எனக்கு முக்கியாமானதாகவும் நல்ல அனுபவமாகவும் இருத்தது.

செல்வி இனியா பால் அருண்



என் கோடை விடுமுறையில், நான் வீட்டில் இருந்தேன். அனால், ஆகஸ்ட் மாதத்தில், நானும் என் குடும்பமும், யெல்லோ ஸ்டோன் தேசியப் பூங்காவில் ஒரு வாரம் இருந்தோம். அங்கே இருக்கும் போது, நாங்க நிறைய பெரிய மலைகளைப் பார்த்தோம். நாங்கள் விலங்குகளை அங்கே பார்த்தோம். அது என்னவென்றால், காட்டு எருமை, ஆடுகள், மான்கள் மற்றும் அழகான பறவைகள் ஆகும். நாங்கள் சிறிய ஏரிகளையும் பார்த்தோம். நானும், என் தம்பியும், தண்ணீரில் விளையாடினோம். யெல்லோ ஸ்டோனில் பல எரிமலைகள் இருந்தன. அருகில் போகும்போது, பெரிய சத்தத்தைக் கேட்க முடியும். அந்த ஒரு வாரத்தில், எல்லா இடங்களுக்குப் போகும்போது, நான் நிறைய வகையான கற்களைச் சேகரித்தேன்.

செல்வி லக்ஷிகா கண்ணன்



நான் என் கோடை விடுமுறையில் என் குடும்பத்துடன் பாஸ்டன் (Boston) சென்றேன். இங்கே அமெரிக்காவின் பல இடங்களைப் பார்த்திருந்தாலும் பாஸ்டன் எனக்கு மிகவும் பிடித்தது. இந்த நகரத்தின் அழகான கட்டிடங்கள், வரலாற்றுச் சின்னங்கள், போர்க் கப்பல் என ஒவ்வொன்றும் ஒரு கதையைச் சொன்னது. பழமையும் புதுமையும் சேர்ந்து இருப்பது பாஸ்டன் நகரத்திற்கு ஒரு தனித்துவமான அழகைத் தந்தது. பிரீடம் ட்ரைல் வழியாக நடந்து சென்ற போது நான் புத்தகத்தில் படித்த பல வரலாற்றை நேரில் பார்த்தேன். பாஸ்டனின் மற்றொரு சிறப்பு பல்வேறு கலாச்சாரங்களை ஒரே நகரத்தில் அனுபவிக்க முடிந்தது. நகரத்தின் இரவு வெளிச்சம் அதைச் சுற்றியுள்ள நீரில் தெரிந்தது பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தது.

செல்வி சம்ருதி குமரன்



இந்தக் கோடை விடுமுறையில், என் அத்தை குடும்பம் ஜெர்மனியில் இருந்து எங்களைப் பார்க்க வந்திருந்தார்கள். நான் அவர்களைப் பார்த்து மிகவும் சந்தோஷமாக இருந்தேன். நாங்கள் எல்லோரும் நியூயார்க் சென்றோம். அங்கே நிறைய இடங்களுக்குச் சென்றோம் மற்றும் நிறைய புகைப்படங்கள் எடுத்தோம். பிறகு, நாங்கள் ஹெர்ஷி பார்க் சென்றோம். அங்கே மிகவும் வேடிக்கையாக இருந்தது. பிறகு, நாங்கள் நயாகரா நீர்வீழ்ச்சிக்கும் சென்றோம். என் குடும்பத்துடன் நேரம் செலவிட்டது எனக்கு மிகவும் பிடித்திருந்தது. இந்தக் கோடை விடுமுறை எனக்கு மிகவும் சந்தோஷமாக இருந்தது.

இளம் சாதனையாளர் பக்கம்





செல்வன் ஆருத்ரேயன் மகேஷ் கார்த்திக் உடன் ஒரு நேர்காணல்

அனைவருக்கும் வணக்கம்!

நான் ரக்ஷன் சீனிவாசன்—பிரடெரிக் தமிழ்ப் பள்ளியில் (Frederick Tamil School) பயின்று கடந்த ஆண்டு பட்டம் பெற்றவன்; தற்போது அங்குள்ள இளைய வகுப்புகளுக்கு உதவி ஆசிரியராகப் பணியாற்றி வருகிறேன்.

இன்றைய நிகழ்ச்சியில் பாரதியார் தமிழ்ப் பள்ளியின் (Bharathiyar Tamil School) ஆசிரியை திருமதி பானு கணேஷ் அவர்கள் எங்களுடன் இணைந்துள்ளார். அவரை அன்புடன் வரவேற்கிறோம்.

இன்று நம்முடன் சிறப்பு விருந்தினராக ஆருத்ரேயன் இணைந்துள்ளார். இவர் மேரிலாண்ட் ட்ரிபிள் ஏ (Maryland Triple A) ஐஸ் ஹாக்கி அணியில் இணைந்துள்ளார்; இந்த நிலையை அடைய அவர் விடாமுயற்சியுடன் செயல்பட்டுள்ளார்.

அவருடைய ஐஸ் ஹாக்கி பயணம் எப்படித் தொடங்கியது, அவரது அனுபவங்கள் எப்படி இருந்தன, படிப்பையும் விளையாட்டையும் எவ்வாறு சமன் செய்கிறார், மற்றும் எதிர்காலக் கனவுகள் என்ன என்பது குறித்து அவரிடம் பேசுவோம்.

ஆருத், உங்களைப் பற்றி அறிமுகப்படுத்திக் கொள்ளுங்கள்.

அனைவருக்கும் வணக்கம்! என் பெயர் ஆருத்ரேயன். நான் விண்ட்சர் நோல்ஸ் நடுநிலைப் பள்ளியில் 6-ஆம் வகுப்பிலும், பிரடெரிக் தமிழ்ப் பள்ளியில் 7-ஆம் வகுப்பிலும் படிக்கிறேன். எனக்கு ஐஸ் ஹாக்கி விளையாடுவது மிகவும் பிடிக்கும். கடந்த ஆறு ஆண்டுகளாக விளையாடி வருகிறேன், தற்போது மேரிலாண்ட் அணிக்காக விளையாடுகிறேன்.

ஆருத், உங்களுக்கு ஐஸ் ஹாக்கி மீது எப்படி ஆர்வம் ஏற்பட்டது? உங்கள் பயணம் எப்போது தொடங்கியது?

நான் ஐந்து வயதாக இருந்தபோது ஸ்கேட்டிங் (skating) செய்யக் கற்றுக்கொள்ளத் தொடங்கினேன். எனக்கு ஸ்கேட்டிங் செய்வது மிகவும் பிடித்திருந்தது, அதில் நான் நன்றாகவே செயல்பட்டேன்.

அப்போது, என்னைப் போன்ற வயதுடைய சிறுவர்கள் பெரிய ஹாக்கி பைகளை எடுத்துக்கொண்டு ஐஸ் ரிங்கிற்கு (ice rink) வருவதைப் பார்ப்பேன். அவர்கள் என்ன செய்கிறார்கள் என்று என் தந்தையிடம் கேட்டபோது, அவர்கள் ஐஸ் ஹாக்கி விளையாடுவதாக அவர் கூறினார். அதைப் பார்த்ததும் எனக்கும் ஐஸ் ஹாக்கி விளையாட வேண்டும் என்ற ஆர்வம் ஏற்பட்டது.

அதே நேரத்தில், எனக்கு ஸ்கேட்டிங் கற்றுக்கொடுத்த பயிற்சியாளர் நான் நன்றாக ஸ்கேட்டிங் செய்வதைப் பார்த்து, ஐஸ் ஹாக்கியையும் முயற்சி செய்து பார்க்குமாறு பரிந்துரைத்தார். அப்படித்தான் நான் ஐஸ் ஹாக்கி விளையாடத் தொடங்கினேன்.

நான் இப்போது கிட்டத்தட்ட ஆறு ஆண்டுகளாக ஐஸ் ஹாக்கி விளையாடி வருகிறேன்.

இந்த விளையாட்டுக்காக நீங்கள் எவ்வாறு தயாராகிறீர்கள்? உங்களுக்கு என்னென்ன உபகரணங்கள் தேவைப்படுகின்றன?



ரக்ஷன்

ஐஸ் ஹாக்கி (Ice hockey) ஒரு வேகமான விளையாட்டு என்பதால், இதற்குப் பல வகையான பாதுகாப்பு உபகரணங்கள் தேவைப்படுகின்றன. முதலில், நான் தலைக்கவசம் (helmet), தோள்பட்டை மற்றும் முழங்கைக்கான பாதுகாப்பு உறைகள் (pads), ஹாக்கி கையுறைகள், ஹாக்கி கால்சட்டை, கால்களுக்கான பாதுகாப்பு உறைகள் (shin guards) மற்றும் கழுத்துப் பாதுகாப்புக் கவசம் ஆகியவற்றை அணிந்துகொள்கிறேன். அதன் பிறகு,





திருமதி பானு கணேஷ்

ஹாக்கி ஸ்கேட்களை (skates) அணிந்து, ஹாக்கி மட்டையை எடுத்துக் கொள்கிறேன். வாய்ப் பாதுகாப்புக் கவசமும் (mouthguard) முக்கியமானது.

பயிற்சிக்கோ அல்லது போட்டிக்கோ செல்வதற்கு முன், எனது அனைத்து உபகரணங்களும் சரியாக உள்ளனவா என்பதை உறுதிப்படுத்திக் கொள்கிறேன். பின்னர், உடல் சூடேற்றும் பயிற்சிகளைச் (warm-ups) செய்து, மனதளவில் விளையாட்டுக்குத் தயாராகிறேன். ஐஸ் ஹாக்கியில் பாதுகாப்பு மிக முக்கியம், எனவே சரியான பாதுகாப்பு உபகரணங்களை அணிவது அவசியமாகும்.

பயிற்சியின் போது நீங்கள் எதை அதிகம் இரசிக்கிறீர்கள்?

பயிற்சியின் போது, 'பக்'கை (puck) அடித்து இலக்கை நோக்கிச் செலுத்தும் (shooting) பயிற்சிகளை நான் மிகவும் இரசிக்கிறேன். குறிப்பாக, அதிவேகமாக ஸ்கேட்டிங் செய்வதையும், கோல் அடிப்பதற்காக 'பக்'கைத் திறமையாகக் கையாள்வதையும் நான் மிகவும் விரும்புகிறேன்.

ஒரு போட்டி எவ்வளவு நேரம் நீடிக்கும்?

ஐஸ் ஹாக்கி போட்டி பொதுவாக மூன்று பகுதிகளாக (periods) விளையாடப்படுகிறது. எங்கள் வயதுப் பிரிவில், ஒவ்வொரு பகுதியும் சுமார் 15 முதல் 17 நிமிடங்கள் வரை நீடிக்கும்.

இடைவேளைகள், தண்டனைகள் (penalties) மற்றும் ஆட்டத் தடங்கல்கள் ஆகியவற்றைச் சேர்த்து, ஒரு போட்டி முடிவடைய பொதுவாக ஒரு மணி நேரம் முதல் ஒன்றரை மணி நேரம் வரை ஆகும்.

எத்தனை வீரர்கள் இருப்பார்கள்?

ஒரு ஐஸ் ஹாக்கி அணியில் பொதுவாக 15 முதல் 18 வீரர்கள் இருப்பார்கள். இருப்பினும், ஒரு நேரத்தில் ஒரு அணியிலிருந்து ஆறு வீரர்கள் மட்டுமே பனித்தளத்தில் (ஐஸ் பரப்பில்) இருப்பார்கள்—அதாவது மூன்று 'ஃபார்வர்டுகள்' (முன்னணி ஆட்டக்காரர்கள்), இரண்டு 'டிஃபென்ஸ்மேன்கள்' (தடுப்பு ஆட்டக்காரர்கள்) மற்றும் ஒரு கோல்கீப்பர்.

இதன் மூலம், ஒரே நேரத்தில் இரு அணிகளிலிருந்தும் மொத்தம் 12 வீரர்கள் களத்தில் இருப்பார்கள்.

ஐஸ் ஹாக்கி விளையாடும்போது உங்களுக்கு பயம் ஏற்படுகிறதா? அப்படியென்றால், அதை எப்படி எதிர்கொள்கிறீர்கள்?

நான் முதன்முதலில் ஐஸ் ஹாக்கி விளையாடத் தொடங்கியபோது சற்று பயந்தேன்; ஏனெனில் இதில் அதிவேகமாக ஸ்கேட்டிங் செய்வது, கீழே விழுவதற்கான ஆபத்து மற்றும் பிற வீரர்களுடன் மோதும் வாய்ப்பு ஆகியவை உள்ளன.

இருப்பினும், தொடர்ந்து பயிற்சி செய்ததால் அந்த பயம் மறைந்துவிட்டது. இப்போது விளையாடும்போது நான் பயத்தைப் பற்றி நினைப்பதில்லை; அதற்குப் பதிலாக, எனது ஆட்டத்தில் கவனம் செலுத்தி, பயிற்சியாளரின் அறிவுறுத்தல்களைப் பின்பற்றி, நம்பிக்கையுடன் விளையாடுகிறேன்.

விளையாட்டையும் படிப்பையும் எவ்வாறு சமன் செய்கிறீர்கள்?

பள்ளியிலிருந்து வீடு திரும்பியதும், எனது வீட்டுப்பாடத்தை உடனே முடித்துவிட முயற்சிப்பேன். சில சமயங்களில், பயிற்சிக்கு செல்லும் வழியில் காரில் செலவிடும் நேரத்தைப் பாடங்களைப் படிக்கப் பயன்படுத்துகிறேன். வார இறுதி நாட்களில் போட்டிகள் இருந்தால், ஆட்டங்களுக்கு இடைப்பட்ட நேரத்தை வீட்டுப்பாடத்தை முடிக்கவோ அல்லது படிக்கவோ பயன்படுத்துகிறேன். இதுவரை, இவ்விரண்டையும் சமாளிப்பது எனக்கு அவ்வளவு கடினமாக இல்லை.

உயர் வகுப்புகளுக்குச் செல்லும்போது படிப்பின் சுமை அதிகரிக்கும் என்பது எனக்குத் தெரியும். இப்போது செய்வது போலவே, நேரத்தை முறையாக நிர்வகிப்பதன் மூலம் படிப்பையும் ஹாக்கியையும் தொடர்ந்து சமநிலையில் கொண்டு செல்வதே எனது திட்டம்.

உங்களுக்குப் பிடித்த ஐஸ் ஹாக்கி வீரர் யார்?

எனக்குப் பிடித்த ஐஸ் ஹாக்கி வீரர் கானர் மெக்டேவிட் (Connor McDavid) ஆவார். அவரது வேகம், திறமை, கோல் அடிக்கும் திறன் மற்றும் ஒட்டுமொத்த விளையாட்டு பாணி ஆகியவற்றை நான் மிகவும் இரசிக்கிறேன்.

ஹாக்கியில் உங்கள் மிகப்பெரிய கனவு என்ன?

ஐஸ் ஹாக்கியில் நான் பெரிய அளவில் சாதிக்க விரும்புகிறேன்.எங்களுடன் உரையாட உங்கள் நேரத்தை ஒதுக்கியதற்கு மிக்க நன்றி. ஐஸ் ஹாக்கி பயணத்தில் உங்களின் மேலும் பல சாதனைகளைக் காண நாங்கள் ஆவலாக உள்ளோம்.

அடுத்த தருணத்தில் சந்திப்போம்!

நன்றி, வணக்கம்!

அறம் என்றால் என்ன?



யாஷிகா இராஜேஷ்

நம் வாழ்வில் அறத்தின் இடம்

அறனெனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்ப தில்லாயின் நன்று.

— திருக்குறள், குறள் 49 (வள்ளுவர்)

முன்னுரை

இவ்வுலகில் மனிதனை மனிதனாக உயர்த்துவது ஒரே ஒரு பண்பு — அது அறம். மரம் நடுவது, நீர் காப்பாற்றுவது, பசியோரிடம் இரக்கம் கொள்வது — இவை எல்லாம் அறத்தின் வடிவங்களே. "அறம்" என்ற சொல் தமிழில் மிகப் பழமையானது. அதன் பொருள் — நேர்மை, கடமை, இரக்கம், நீதி என விரிகிறது.

நம் முன்னோர்கள் உலகிற்கு மூன்றை தந்தனர்: அறம், பொருள், இன்பம். இம்மூன்றில் அறமே முதலிடம் பெறுகிறது. ஏனென்றால், அறமில்லா வாழ்க்கை வேரில்லா மரம் போன்றது!

அறம் என்றால் என்ன?

"அறம்" என்பதற்கு திருவள்ளுவர் தரும் விளக்கம் மிகவும் எளிமையானது — பிறருக்கு தீங்கு செய்யாமல், நன்மை செய்து வாழ்வதே அறம்.

அகன்அமர்ந்து செய்யாள் உறையும் முகனமர்ந்து
நல்விருந்து ஓம்புவான் இல்.

— திருக்குறள், குறள் 84 (விருந்தோம்பல்)

விருந்தினரை அன்புடன் வரவேற்பதே அறம் என்று வள்ளுவர் கூறுகிறார். அதாவது, நம் இல்லத்திற்கு வந்தவரை பசிக்கு வாட விடாமல் உணவளிப்பது — இதுவே அறத்தின் ஓர் உதாரணம்.

அறத்திற்கு எடுத்துக்காட்டுகள்:

எடுத்துக்காட்டு — பள்ளியில் அறம்

நம் வகுப்பில் ஒரு மாணவன் புத்தகம் வாங்க வசதியில்லாமல் இருக்கிறான். அவனுக்கு நம்முடைய பழைய புத்தகங்களை கொடுக்கிறோம். இதுவே அறம்! பணம் செலவழிக்காமல், ஒரு சிறு செயலால் ஒருவரின் வாழ்க்கையை மாற்றலாம்.

எடுத்துக்காட்டு — வரலாற்றில் அறம்

மகாத்மா காந்தியடிகள் தன் வாழ்நாள் முழுவதும் உண்மையையும் அகிம்சையையும் கடைப்பிடித்தார். "என் வாழ்க்கையே என் செய்தி" என்று சொன்னவர் — அதுவே அறத்தின் உயர்ந்த வடிவம். ஒரு மனிதன் வாழ்ந்து காட்டுவது, பேசுவதை விட மேலானது.

எடுத்துக்காட்டு — இயற்கையிடம் அறம்

மரங்களை வெட்டாமல் காப்பாற்றுவது, நதியை மாசுபடுத்தாமல் வைப்பது — இவை இயற்கையிடம் நாம் காட்டும் அறம். சங்க இலக்கியம் சொல்கிறது: "யாதும் ஊரே யாவரும் கேளிர்" — இந்த உலகே நமது ஊர், எல்லாரும் நமது உறவினர்.

யாதும் ஊரே யாவரும் கேளிர்;
தீதும் நன்றும் பிறர்தர வாரா. — புறநானூறு 192, கணியன் பூங்குன்றனார்

இந்த வரிகள் நமக்குக் கற்றுத் தருவது என்னவென்றால் — "நன்மையோ தீமையோ, நாமே நம் செயல்களால் உருவாக்குகிறோம்." எனவே அறமான செயல்களே நம் வாழ்க்கையை அழகுபடுத்தும்.

வள்ளுவர் சொல்லும் அறம்

திருக்குறளில் முதல் அதிகாரமே "கடவுள் வாழ்த்து" என்றாலும், "அறத்துப் பால்" என்ற முதல் பிரிவே இந்நூலின் ஆணி வேர். வள்ளுவர் அறத்தை வெறும் கோவிலில் வழிபடும் சடங்காக அல்ல, அன்றாட வாழ்வில் செய்யும் செயல்களாக விளக்குகிறார்.

வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். — திருக்குறள், குறள் 50

இந்த குறளின் பொருள்: "உலகில் அறத்தோடு வாழ்பவன், விண்ணில் உள்ள தெய்வத்திற்கு இணையாக போற்றப்படுவான்." எவ்வளவு பெரிய வார்த்தைகள்! இறைவனாக வாழ வேண்டுமென்றால் அறமே வழி என்கிறார் வள்ளுவர்.

இன்றைய உலகில் அறம்:

இன்று நாம் செல்போன், இணையம், செயற்கை நுண்ணறிவு என வியக்கத்தக்க உலகில் வாழ்கிறோம். ஆனால் இந்த உயர்தொழில்நுட்ப உலகிலும் அறம் தேவைப்படுகிறது. சமூக வலைத்தளங்களில் பொய்யான செய்திகளை பரப்பாமல் இருப்பது, தேர்வில் நகல் எடுக்காமல் இருப்பது, வலியவர்களுக்கு உதவி செய்வது — இவை எல்லாம் 21ஆம் நூற்றாண்டின் அறம். ஒரு நாட்டின் முன்னேற்றம் ஆயுத பலத்தில் இல்லை, அதன் மக்களின் அறத்தில்தான் உள்ளது. நாம் 8ஆம் வகுப்பு படிக்கிறோம், ஆனால் இன்றே அறம் கடைப்பிடிக்கத் தொடங்கினால், நாளை நாமே நல்ல சமுதாயத்தை கட்டியெழுப்புவோம்.

அறம் என்பது ஒரு நூலில் படிக்கும் பாடம் மட்டுமல்ல — அது நாம் வாழும் விதம். பிறரிடம் அன்பு காட்டுவது, உண்மை பேசுவது, துன்பப்படுவோரை ஆதரிப்பது — இவை வாழ்வில் அறமாக மலரட்டும்!

"அன்பும் அறனும் உடைத்தாயின் இல்வாழ்க்கை
பண்பும் பயனும் அது."

— திருக்குறள் 45

வரலாற்றின் பாதையில் ஒரு பயணம்

செல்வி இனயா நிசாமுதீன்



வரலாறு என்பது புத்தகங்களில் மட்டுமல்ல; மனித நாகரிகத்தின் தடங்களைத் தாங்கி நிற்கும் இடங்களிலும் உயிருடன் வாழ்கிறது. அமெரிக்காவின் இரண்டு முக்கிய வரலாற்றுத் தளங்களைப்




பற்றி இந்தப் பயணத்தில் அறிந்து கொள்வோம்.

1. சுதந்திர மணி (Liberty Bell) – அமெரிக்க சுதந்திரத்தின் சின்னம்

அமெரிக்காவின் பென்சில்வேனியா மாநிலத்தில் உள்ள பிலடெல்பியா நகரில் அமைந்துள்ள சுதந்திர மணி (Liberty Bell), அமெரிக்க விடுதலைப் போராட்டத்தின் முக்கியமான அடையாளமாகக் கருதப்படுகிறது. 1752ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இந்த மணி, 1776ஆம் ஆண்டு அமெரிக்க சுதந்திரப் பிரகடனம் வாசிக்கப்பட்ட காலகட்டத்துடன் தொடர்புடையது. மணியில் காணப்படும் புகழ்பெற்ற விரிசல் (crack) இதன் தனிச்சிறப்பாகும். "Proclaim Liberty Throughout All the Land" என்ற வாசகம் இதில் பொறிக்கப்பட்டுள்ளது. இன்று உலகம் முழுவதும் இருந்து வரும் பார்வையாளர்கள் இந்த வரலாற்றுச் சின்னத்தைப் பார்வையிட்டு அமெரிக்காவின் சுதந்திர வரலாற்றை அறிந்து கொள்கின்றனர். சுதந்திரம், சமத்துவம் மற்றும் ஜனநாயகத்தின் அடையாளமாக இந்த மணி விளங்குகிறது.

2. மேசா வெர்டே தேசியப் பூங்கா (Mesa Verde National Park)

கொலராடோ மாநிலத்தில் அமைந்துள்ள மேசா



வெர்டே தேசியப் பூங்கா, பண்டைய புவெப்லோ (Ancestral Pueblo) மக்களின் வரலாற்றுச் சின்னங்களை பாதுகாக்கும் முக்கியமான இடமாகும். சுமார் 700 ஆண்டுகளுக்கு முன்பு, இந்த மக்களால் மலைப்பாறைகளின் உட்பகுதியில் கட்டப்பட்ட வீடுகள் மற்றும் குடியிருப்புகள் இங்கு காணப்படுகின்றன. குறிப்பாக "Cliff Palace" எனப்படும் பாறை அரண்மனை, வட அமெரிக்காவின் மிகப்பெரிய பாறை குடியிருப்பாக அறியப்படுகிறது. 1906ஆம் ஆண்டு தேசியப் பூங்காவாக அறிவிக்கப்பட்ட இந்த இடம், பின்னர் யுனெஸ்கோ உலக பாரம்பரியச் சின்னமாகவும் அங்கீகரிக்கப்பட்டது. அக்கால மக்களின் கட்டிடக்கலை, சமூக வாழ்க்கை மற்றும் அறிவாற்றலை வெளிப்படுத்தும் அரிய வரலாற்றுச் சான்றாக மேசா வெர்டே திகழ்கிறது.

குழந்தைகள் நாள் விழா வாழ்த்துகள்



ஆண்டி சாவித்திரி கிரி
& ஜெகதா கிரி
ஓவியா கிரி,
அகிலன் கிரி, நேயா கிரி

SOFTSQUARE LLC, CHENNAI / USA



மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகத்தின் 16-வது ஆண்டு விழா

தொகுப்பு: திருமதி நாராயணி வள்ளிக்கண்ணு நாச்சியப்பன்

"கற்க கசடற கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

என்ற குறள் வழியில் தாங்கள் கற்ற "நற்றமிழை"அமெரிக்க வாழ் நம் தமிழ்ப் பிள்ளைகளுக்கு சேவை உணர்வோடு "செந்தமிழை" கற்பித்தும் வளர்த்தும் வருகிறது எம் மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகம்.

அவ்வண்ணமே எம் பள்ளியின் பிள்ளைகளும்

"நெடுநேரமும் கற்றாரைக் காண்டல் இனிதே
கடுமாறும் கற்றாரைக் கேட்டால் இனிதே "



என்ற நாலடியார் வரிகளுக்கு இணக்கமாக "அமுதுதமிழை" பல நூல்கள் கற்றுக் கற்பிக்கும் ஆசிரியரைப் பணிந்து அவரின் அறிவுரைப்படி கற்று வருகிறார்கள் என்பதில் பெருமிதம் கொள்கிறோம்.

இத்தகு எம் பள்ளியின் 2025-2026 கல்வியாண்டின் நிறைவு நாளாக கடந்த ஜூன் 6-ம் தேதி சனிக்கிழமை அன்று, வெற்றிகரமாக நடைபெற்றது. 16 ஆண்டுகளைக் கடந்தும் இக்கல்விச் சேவையை செவ்வனவே செய்து வருகிறது மேரிலாண்ட் தமிழ்க் கல்விக் கழகம் என்பதில் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறோம்.

எங்கள் பள்ளியின் 16வது ஆண்டு விழா வெகு விமர்சையாகவும், பிரம்மாண்டமான முறையில் கோலாகலமான உற்சாகத்துடன் நடைபெற்றது. நான் இப்பள்ளி ஆசிரியராகவும்,இந்நிகழ்ச்சியின் தன்னார்வலத் தொண்டராகவும் இப்பெரும் மகத்தான ஆண்டுவிழாவைக் கண்டு அகமகிழ்ந்து இங்கு உங்களிடத்தில் விரிவாகக் கூறி பகிர்ந்து கொள்வதில் பேரானந்தம் அடைகிறேன்.

இவ்விழாவின் ஏற்பாடுகள் ஜூன் 5ம் தேதி வெள்ளிக்கிழமை மாலையிலிருந்து களைகட்டியது, எங்கள் தமிழ்ப் பள்ளி திருவிழாக் கோலம் பூண்டது என்பதில் ஐயமில்லை.. முதலில் என்னைக் கவர்ந்த நிகழ்ச்சி ஏற்பாடுகளுடன் தொடங்குகிறேன்.

நம் மனதில் இனிய நினைவேடுகளாகப் பதிய வைக்க எடுக்கும் நிழற்படத் தளம் மிகுந்த வேலைப்பாடுகளுடன் அமைக்கப்பட்டு இருந்தது. அவற்றில் திருவள்ளுவர் உருவச் சிலை அமர்ந்த நிலையில் வீற்றிருப்பதும், அவர் பின்பு மின்னும் வண்ணத் தோரணச் சீலைகளும் பச்சைப்பசேல் என காட்சியளிக்கும் செயற்கைச் செடிகளும் கொண்டு அவருடன் ஜொலிக்கும் கொத்து விளக்குகளின் தீபங்களும் பள்ளி ஆண்டு விழாவை மங்கலத் திருவிழாவாக உருமாற்றியது.

உள்ளே அனைவரையும் வரவேற்கும் விதமாக வரவேற்பு மேசையில் நம் பாரம்பரிய உணவுகளாகிய





சிறுதானியங்கள் அனைத்தும் அடங்கிய வரையப்பட்ட அட்டைப்படங்களும், அலங்கரிக்கப்பட்ட மேசையும் இனிமையாக வரவேற்றது.

அதன் அருகில் பள்ளியின் கடந்த அரையாண்டில் நடந்த கலை இலக்கியப் போட்டிகளில் ஒன்றான ஓவியப் போட்டியில் பங்குபெற்ற அனைத்துப் பிள்ளைகளின் "கற்பனைத் திறனின் வண்ணம் தீட்டப்பட்ட கைச் சித்திரங்கள்" ஏழு வர்ணங்கள் அடங்கிய வானவில் தோரணம் போல் அவ்வோவியங்கள் காட்சியளித்தன.

இவற்றை எல்லாம் இரசித்து விட்டுத் திரும்பினால், விழாவின் நாயகனான மேடையின் அலங்கரிப்பு பிரம்மிப்பாக இருந்தது. விழாவின் நாயகன் மினுமினுப்பாக ஜொலிக்கும் பல வண்ணத் தோரணத் திரைச் சீலைகளும் அவ்வண்ணமே சேர்த்த நம் பள்ளியின் அரும்பெயரும் பளபளப்பாக மின்னியது, அனைவரையும் உற்சாகப்படுத்தி கலை நிகழ்ச்சிகள் மற்றும் இதர பிற நிகழ்வுகளும் ஒளிக்கூடி பிரகாசித்தது.

மேடையில் குழந்தைகள் தமிழ்த்தாய் வாழ்த்து பாடி பள்ளி ஆண்டு விழாக் கொண்டாட்டம் இனிதே துவங்கியது, முதன்மையாக அரையாண்டில் நடந்த கலை இலக்கியப் போட்டிகளில் வென்றவர்களுக்குப் பரிசளிக்கும் நிகழ்வு ஆரம்பமானது.

அதில் மழலைக் குழந்தைகள் முதல் நிலை 2 வரைக்கும் உள்ள குழந்தைகளுக்கு பரிசுகள் கொடுக்கப்பட்டது .

அதற்கு அடுத்து இருந்த ஒவ்வொரு வகுப்பையும் பிரித்து நிலை 9 வரைக்கும் உள்ள பிள்ளைகளுக்கு கலை நிகழ்ச்சிக்கு இடையிடையே வழங்கப்பட்டது. அனைத்து வெற்றி பெற்ற பிள்ளைகளுக்கும் பரிசுகள் விடுபடாமல் வழங்கப்பட்டது. இதுவே இப்பரிசளிப்பின் குறிப்பிடத்தக்க சிறப்பம்சம் ஆகும்.

"வார்த்தைகள் தோற்கும் இடத்தில்
மௌனம் பிறப்பதில்லை ;
கலைகள் பிறக்கின்றன
இதயத்தின் இரகசியங்களை
உலகிற்கு சொல்லும்
உன்னத மொழி"

-என்று கூறுகிறார், நம் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன். இக்கவிதை போலவே எம் பள்ளியின் கலைகள் பிறக்கத் தொடங்கியது. முதலில் மழலைப் பட்டாளங்களின் நடனம், துள்ளும் இளங்கன்றுகளாக அசத்தலாக ஆடிப் பார்வையாளர் களைக் கவர்ந்தனர்.

"காற்றின் அசைவிலும் நடனம் உண்டு" என்பதை உணர்த்தும் வகையில் மழலைப் பிள்ளைகள் மற்றும் அடுத்த நிலை 5 வரை உள்ள செல்வச் சிறுவர் சிறுமிகளின் நடனம் "அடித் தூள் அதிரடி கலக்கல்" பட்டாசாக இருந்தது.பார்ப்பவர் கண்களுக்கு குளுகுளுவென புத்துணர்ச்சி தந்தது.

"கடலின் அலையில் இசை உண்டு" என்பதற்கிணங்க, 8 வயது முதல் 12 வயது பிள்ளைகளின் இசை ஞானத்தை வெளிப்படுத்தும் விதமாக "மின்னனு விசைப்பலகையை" வாசித்து தமிழிசை அடங்கிய



Combo Offer - Chicken Biryani + Chicken 65 @ 19.99





திரையிசைப் பாடல்களின் இசைக் கோர்ப்பாக ஒவ்வொருவரும் அவர்கள் பாணியில் வாசித்து அசத்தினார்கள். அருமையான இவ்விசை கேட்பவர்களின் செவிகளுக்கு இதமாக இருந்தது.

"ஒவ்வொரு குருவியின் குஞ்சுகளும் உயர மேலே பறக்கும் ஆசையுடன் தன் தாயிடம் பல சோதனைகள் மற்றும் சில சாதனைகளுடன் நன்கு கற்றுக் கொண்டு சிறகடித்துப் பறக்கத் துடிக்கும் இளங் குருவியைப் போல நம் "அருந்தமிழை" கற்க, தன் தமிழ்த் தாயாகிய மேரிலாண்ட் தமிழ்ப் பள்ளியில் தன் குழந்தைப் பருவத்தில் இருந்து நன்கு கற்று பல சோதனைகள் கடந்து நிலை 10 வரை முடித்து, தேர்ச்சி பெற்று "வெற்றி வாகை சூடும்" எம் பள்ளி மாணாக்கர்களுக்கு வாழ்த்துகள் கூறி, மேலும் பெருமை சேர்க்கும் விதமாக "பட்டமளிப்பு விழா" நடந்தேறியது.



"நீர் அருவிகள் கொட்டும் ஓசைகளில் வருவதும் கீதம் அதுவே சங்கீதம்" என்ற கவிதையின் ஓசையில் வந்தார்கள். இன்ப இசைப் பாடும் இரு குழுவினர்கள், முதலில் வந்த குழு "ராஜாவின் வானம்பாடிகளாக" மாறி தங்களின் "குயில் குரலில் பாடி கேட்பவர்களைத் தென்றலாக வருடிச் சென்றார்கள்.

அடுத்து வந்த குழு "யாழிசைக் குழுவாக" உருமாறி தாங்களின் "தேனிசைக் குரலில்" திரவியமாகப் பாடி கேட்கும் செவிகளுக்குத் தேனாய் இனித்தார்கள்.

எமது பள்ளியில் மழலை முதல் நிலை 10 வரை கற்பிக்கும் தன்னார்வல ஆசிரியர்களை கௌரவிக்கும் விதமாக "ஆசிரியர் விருதுகள்" வழங்கப்பட்டது.அதில் 5 ஆண்டுக்கு மேல் தன்னார்வல ஆசிரியராகப் பணிபுரிபவர்களுக்கு "நெடுநாள் ஆசிரியர் விருதும்" வழங்கப்படும். இந்த வருடம் அவ்விருதை நான் பெற்றேன் என்பதில் உளமார மகிழ்ச்சி அடைகிறேன்.

மரக்கிளைகளின் அசைவிலும் நடனம் உண்டு என்பதை உறுதி செய்ய வந்தார்கள் எங்கள் பள்ளியின் தாய்மார்களும் அவர்களின் சேய்களும். இருவேறு வகையான நடனக் குழுக்கள் நீயா.. நானா .. என்று போட்டி நடனமாடினர். முதல் குழுவினர் தங்கள் அட்டகாசமான நடன அசைவுகளுடன் தூள் பறக்க விட்டார்கள். இரண்டாவது குழுவில் தாயும் சேயும் "மிரட்டலாகவும், அசத்தலாகவும்" ஆடி மேடையை மிரளவிட்டார்கள். அடுத்த தாய்மார்களின் குழு நடனம் "அதிரடி சரவெடியாக, மின்னும் கலக்கல்" துள்ளலிசை நடனமாக இருந்தது.

புதுவிதமாக சிறுகுழந்தைகள் ஒன்று சேர்ந்து "குறும்நாடகம்" நடத்தினார்கள்.. அவற்றில் சமூக அக்கறையுடன் நம் சமுதாய நல்லுறவுக்காக கதைகள் கொண்டு கலை நயத்துடன் மனித நேய உணர்வுகளை சரியான முறையில் வெளிப்படுத்தி அருமையாக நடித்து கரவொலிகளைத் தங்களுக்கு உரித்தாக்கினார்கள்.

இக்கலைகளின் நிறைவாக இவ்வாண்டு புதிதாக அறிமுகப்படுத்தியது, அசலா? நகலா? இது ஒரு போட்டி நிகழ்ச்சி,இதில் ஏற்கனவே வசனங்கள் பதிவேற்றம் செய்யப்பட்ட ஒலி நாடாக்களுக்கு இணக்கமாக நடிக்க வேண்டும் என்பது போட்டி விதிகள், அவ்விதிகள் படி மிக நேர்த்தியாகவும்


சொல் விளையாட்டு விடைகள்

1. வணக்கம் 2. வழக்கம்/ பழக்கம்
3. தயக்கம் 4. அரங்கம் 5. ஒழுக்கம்

சிறப்பாகவும் ஒவ்வொரு குழுக்களும், நாடகப் பாணியில் மிக அருமையாக நடித்தார்கள்.. தூள் பறக்கும் நகைச்சுவையான நடிப்பு பார்வையாளர்களின் சிரிப்பலைகளைப் பரிசாகப் பெற்றதோடு, பரிசுக் கோப்பையையும் வென்றார்கள்.

ஆரம்பித்த அதே சுவடுடன் குதூகலமாகவும் மகிழ்ச்சி ஆரவாரத்துடன் எங்கள் பள்ளி 16வது ஆண்டு விழா இன்பக் களிப்புடன் நிறைவு பெற்றது. இத்திருவிழாவிற்கு வருகை தந்து, பொறுமை காத்து பட்டங்கள், பரிசளிப்பு மற்றும் விருதுகள் வழங்கிய நம் விருந்தினர்களுக்கு நன்றிகளும் வாழ்த்துகளும்! இவ்விழா கோலாகலமாக நடக்க முன்பே சரியாகவும் சீராகவும் சிந்தித்து செம்மையாக திட்டமிட்ட குழுக்களும் கலை நிகழ்ச்சி மற்றும் நிகழ்ச்சி நிரலின் ஒருங்கிணைப்பாளர்கள், பரிசளிப்பு நிரலின் ஒருங்கிணைப்பாளர்கள் அத்துணைப் பேருக்கும் நன்றிகளும் பாராட்டுகளும். நேர்த்தியான அனைத்து அலங்கரிப்புகளையும் சிறப்பாகச் செய்த தன்னார்வலத் தொண்டர்களுக்கும், கலை நிகழ்ச்சி களுக்கு ஒலி நாடாக்களை ஒலிக் கருவியுடன் கோர்த்து நிகழ்ச்சிக்குப் பக்க பலமாக இருந்த ஒலிபெருக்கிக் கலைஞர்களுக்கும் நன்றிகளும் பாராட்டுகளும்!

வாழ்க செந்தமிழ்! வளர்க தீந்தமிழ்! வெல்க நற்றமிழ்!









கலையும் இசையும் உற்சாகமும் சங்கமித்த முத்தமிழ் விழா 2026

தொகுப்பு: திருமதி சத்யா நம்பி



வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கத்தின் முத் தமிழ் விழா, 2026 ஜூலை 19ஆம் நாள், ஞாயிற்றுக்கிழமை அன்று மேரிலாந்து மாகாணம், பொட்டோமாக் நகரிலுள்ள கேபின் ஜான் நடுநிலைப் பள்ளியில் சிறப்பாக நடைபெற்றது. தமிழுறவுகள் குடும்பத்தினருடனும் நண்பர்களுடனும் ஒன்றுகூடிய இவ்விழா, தமிழ்க் கலை களையும் சமூகத்தின் ஒற்றுமையையும் கொண்டாடும் இனிய நாளாக அமைந் தது.

தமிழ்த்தாய் வாழ்த்துடனும் திருக்குறள் மறையோதலுடனும் தொடங்கிய விழா, தொடர்ந்து பல்வேறு கலை நிகழ்ச்சிகளுடன் களை கட்டியது. மீனாட்சி இராஜமாணிக்கம் ஒருங்கிணைத்த "வன தேவதைகள்", கனிமொழி மூர்த்தி ஒருங்கிணைத்த "கருப்பு கொண்டாட்டம்" மற்றும் "AI பரிதாபங்கள்" ஆகிய நிகழ்ச்சிகளில் பங்கேற்பாளர்கள் தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர். சமகாலத் தொழில்நுட்பத்தை மையப்படுத்திய "AI பரிதாபங்கள்", தமிழ் மேடையில் புதுமையான கருப்பொருளுக்கும் இடமளித்தது.


ஸ்ரீலேகா தினேஷ் ஒருங்கிணைத்த "தெறிக்கும் குட்டி பட்டாசுகள்", நாராயணி நாச்சியப்பன் ஒருங்கிணைத்த "கண்ணின் மணிகள்", குமாரி சக்தி சிவகுமார் ஒருங் கிணைத்த "நட்சத்திர நடனம்", சந்தியா ஒருங்கிணைத்த "பட்டாம்பூச்சி நடனக் குழு" ஆகிய நிகழ்ச்சிகளும் விழாவுக்கு வண்ணம் சேர்த்தன. இளம் பங்கேற்பாளர் களின் கலை ஆர்வமும், அவர்களை மேடைக்குத் தயார்படுத்திய ஒருங்கிணைப் பாளர்கள் மற்றும் பெற்றோர்களின் முயற்சி யும் இந்நிகழ்வுகளில் வெளிப்பட்டன.

இயற்றமிழுக்குச் சிறப்பு சேர்க்கும் வகையில் சங்கத்தின் "தென்றல் முல்லை" இதழ் வெளியீடு இடம்பெற்றது. இதழின் முதன்மை ஆசிரியர் முனைவர் பாலா குப்புசாமி அவர்களின் தலைமையில் தமிழ்ச்சங்கத்தின் மேனாள் தலைவர்கள், இந்நாள் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் சிறப்பு விருந்தினர் கலைமாமணி திரு. இரமணன் அவர்களின் முன்னிலையிலும் சிறப்பாக வெளியிடப் பட்டது. புலம்பெயர் தமிழர்களின் எழுத்துக்கும் படைப் பாற்றலுக்கும் களம் அமைக்கும் இவ்விதழின் பதிப்புகளைத் தமிழ்ச் சங்க இணையதளத்திலும்









வாசிக்கலாம் என்ற தகவல் பகிரப்பட்டது. கவியரசு கண்ணதாசனை நினைவுகூரும் நிகழ்வில் இடம்பெற்ற இசைக்கவி இரமணனின் சிறப்புரை, விழாவின் இலக்கியச் சிறப்புக்கு மேலும் மெருகூட்டியது.

விழாவின் முக்கிய ஈர்ப்புகளில் ஒன்றாக நேரடி இசைக்குழுவின் இன்னிசை நிகழ்ச்சி அமைந்தது. உள்ளூர் இசைக்கலைஞர்களும் அரக்கோணத்தைச் சேர்ந்த இசைக்கலைஞரும் இணைந்து வழங்கிய இந்த நிகழ்வு, முத்தமிழ் விழாவின் இசைக் கொண்டாட்டத்திற்குத் தனிச்சிறப்பைத் தந்தது. பாடற்குரல்களும் இசைக்கருவிகளும் நேரடியாக இணைந்த இசையனுபவம், குடும்பத்தினரும் நண்பர்களும் ஒன்றாக அமர்ந்து இசையை இரசிப்பதற்கான இனிய தருணமாக அமைந்தது. உள்ளூர் கலைத்திறனையும் தமிழகக் கலைஞரின் பங்களிப்பையும் ஒரே மேடையில் இணைத்த இந்த முயற்சி குறிப்பிடத்தக்கது.

கலைக்கும் இசைக்கும் இடையே உணவு ஏற்பாடுகளும் விழாவிற்கு மேலும் சுவை சேர்த்தன. காய்கறிப் புலாவ், குருமா, சப்பாத்தி, மஞ்சூரியன், தயிர்சாதம், கேசரி உள்ளிட்ட மதிய உணவு வகைகளுடன், பகோடா, சமோசா, பாதுஷா போன்ற சிற்றுண்டிகளும் விற்பனைக்கு இருந்தன. தேநீர், காபி, மாம்பழ லஸ்ஸி, கோலி சோடா உள்ளிட்ட பானங்களும் இடம்பெற்றன. உறவுகளுடன் உரையாடியபடி உணவருந்துவதற்கும் நிகழ்ச்சிகளுக்கு இடையே சிற்றுண்டிகளைச் சுவைப்பதற்கும் இந்த ஏற்பாடுகள் வசதியாக அமைந்தன.

அன்றைய நாள் உலகக் கோப்பைக் கால்பந்து இறுதிப்போட்டி நடைபெற்ற நாளாக இருந்தபோதிலும், தமிழுறவுகள் ஆர்வத்துடன் முத்தமிழ் விழாவில் கலந்துகொண்டது குறிப்பிடத்தக்கது. கால்பந்து இரசிகர்களின் விருப்பத்தையும் கருத்தில்கொண்டு, இறுதிப்போட்டியைப் பார்ப்பதற்குத் தனித் திரையில் இணையான ஏற்பாட்டைச் சங்கம் செய்திருந்தது. விழாவில் பங்கேற்றபடியே போட்டியையும் கண்டுகளிக்கக் கிடைத்த இந்த வாய்ப்பு, கால்பந்து ஆர்வலர்களிடமும் குழந்தைகளிடமும் நல்ல வரவேற்பைப் பெற்றது. பங்கேற்பாளர்களின் பல்வேறு ஆர்வங்களுக்கும் இடமளித்த இந்த ஏற்பாடு, விழாவின் மகிழ்ச்சியை மேலும் கூட்டியது.

மேடையில் பங்கேற்ற கலைஞர்கள், நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தவர்கள், துணைநின்ற பெற்றோர்கள், சங்க நிர்வாகிகள் மற்றும் தன்னார்வலர்கள் ஆகியோரின் கூட்டு உழைப்பால் முத்தமிழ் விழா சிறப்புற்றது. தமிழ்க் கலைகளோடு இசை, உணவு, விளையாட்டு உற்சாகமும் இணைந்த இந்நாள், வாசிங்டன் வட்டாரத் தமிழுறவுகளுக்கு இனிய சந்திப்பாகவும் நினைவில் நிற்கும் கொண்டாட்டமாகவும் அமைந்தது.



படைப்பும், படைப்பாளியும்...

ஜெயகாந்தன் (JK)

தேவன் வருவாரா

சிறுகதை அறிமுகம்...



எழுத்து: திரு. கமலபாரதி பச்சியப்பன்



ஜெயகாந்தன் (1934–2015) நவீன தமிழ் இலக்கியத்தின் மிகச்சிறந்த எழுத்தாளர்களுள் ஒருவர். சமூக எதார்த்தவாதத்தை அடிப் படையாகக் கொண்டு அவர் எழுதிய சிறுகதைகளும் நாவல்களும் தமிழ் இலக்கிய உலகில் பெரும் மறுமலர்ச்சியை ஏற்படுத்தின. சமூகத்தால் ஒதுக்கப்பட்ட எளிய மனிதர்களின் குரல்களைத் தன் எழுத்தின் வழியே முதன்மைப்படுத்தி, அவர்களை வெறுமனே பரிதாபத்திற்குரியவர்களாக உருவகிக்காமல் மிகுந்த சுயமரியாதை கொண்ட மனிதர்களாகப் படைத்துக் காட்டினார். சாகித்திய அகாதமி மற்றும் ஞானபீட விருதுகளைப் பெற்றவர் திரு.ஜெயகாந்தன்.

'தேவன் வருவாரா?' என்ற இச்சிறுகதையில் ஜெயகாந்தன் தன் பேனாவை ஒரு சாட்டையாகப் பயன்படுத்தி, சமுதாயத்தின் போலித்தனங்கள் மற்றும் அறியாமையின் மீது சவுக்கடி கொடுத்துள்ளார்.

புராணக் கதையில் சிவபெருமான் பிரம்படி பட்டபோது உலகிலுள்ள அனைத்து உயிர்களின் முதுகிலும் அந்த வடு விழுந்ததாகக் கூறுவார்கள். அதேபோல, ஜெயகாந்தனின் "தேவன் வருவாரா?" கதையை வாசிக்கும்போது மனசாட்சியுள்ள ஒவ்வொரு மனிதனின் நெஞ்சிலும் ஒரு ஆழமான வடு விழுவது போன்ற உணர்வே ஏற்படுகிறது. ஏழை மக்களின் பிழைப்பு, மனிதநேயம், மற்றும் சமூகத்தின் இரக்கமற்ற போக்கு ஆகியவற்றை வெளிச்சம்போட்டுக் காட்டும் இக்கதை, வாசகனின் மனசாட்சியை ஓங்கிச் சாடி, சிந்திக்க வைக்கும் ஒரு உன்னதமான இலக்கிய அனுபவமாகும்.

வாசகர்களுக்கு

https://www.sirukathaigal.com/%E0%AE%A4%E0%AF%87%E0%AE%B5%E0%AE%A9%E0%AF%8D-%E0%AE%B5%E0%AE%B0%E0%AF%81%E0%AE%B5%E0%AE%BE%E0%AE%B0%E0%AE%BE/

முழுக் கதையை இந்த சுட்டியில் படிக்கலாம்.என்னால் இயன்ற அளவு சுருங்க எழுத முயன்று உள்ளேன். என்னுடைய சுருக்கமான கதையை படிக்காமல் நேராக முழுக் கதையை படித்தால் பெரிதும் மகிழ்ச்சியே!

அறிமுகம் – ஆரோக்கியம், அழகம்மாள்

பொழுது சாய்ந்து வெகு நேரமாகிவிட்ட நிலையிலும், சித்தாள் வேலைக்குச் சென்ற அழகம்மாள் வீடு திரும்பாததால் கிழவி ஆரோக்கியம் கவலை அடைகிறாள். தன் குடிசைக்குள் இருவருக்குமான உணவைச் சமைத்து முடித்துவிட்டு வெளியே வந்து, நிலவு வெளிச்சத்தில் தெருவில் செல்பவர்களிடம் அழகம்மாளைப் பற்றி விசாரிக்கிறாள். வேலைக்குச் சென்ற மற்ற பெண்கள் வழியில் எங்கேனும் பிரிந்து சென்றிருக்கலாம் என்று கூற, ஆரோக்கியம் சேரித்

தெருவெங்கும் ஓடி ஓடித் தேடுகிறாள். தெருமுனை சாயபுக் கடையிடம் விசாரிக்கும் போது, அவன் "அந்தப் பைத்தியத்தையா தேடுகிறாய்?" என்று அலட்சியமாகக் கூறுகிறான்.

யார் பைத்தியம்?

ஆமாம்; இரண்டு மாதத்துக்குமுன் அழகம்மாள் பைத்தியமாகத்தான் இருந்தாள். இதே தெருவில், குப்பைத் தொட்டிகளைக் கிளறிக்கொண்டு, எச்சில் இலை நக்கிப் பசி தீர்த்துக் கொண்டு, 'ஆடை பாதி, ஆள் பாதி' க் கோலத்துடன் பைத்தியமாய்த் திரிந்து கொண்டிருந்தவள்தான் அழகம்மாள்.

ஒரு ஞாயிற்றுக்கிழமை காலையில் ஆரோக்கியம் மாதாகோவிலுக்குச் செல்லும் வழியில், மாதாகோவில் பாதை ஓரத்தில் உள்ள இரண்டு மரங்களுக்கு இடையே உடலை மறைத்துக்கொண்டு "ஆயா... ஆயா... நானும் உன்னை மாதிரி ஒரு மனுசப் பிறவி தானே?...ஒரு பொம்பளைப் பொண்ணு கட்டத் துணி இல்லாம நிக்கிறேனே பாத்திக்கிட்டே போறியே ஆயா..." என்று கதறியழுதாளே அவளா பைத்தியம்?

உடனே கோயிலுக்குப் போவதை நிறுத்திவிட்டு, ஓடோடிச் சென்று தன் குடிசையிலிருந்த புடவையை எடுத்துவந்து கொடுக்க நீ தான் தெய்வம் என்றாளே அவளா பைத்தியம் ?

தேவன் வருவாரா? வினா?

பத்து ஆண்டுகளுக்கு முன்பு தன்னை விட்டு ஓடிப்போன மகள் இசபெல்லாவின் நினைவு ஆரோக்கியத்திற்கு வர அழகம்மாளை மகளாகவே சேர்த்துக் கொண்டாள் ஆரோக்கியம் ஆயா. இருவர்க்கும் இருவர் துணையாகி — நாளெல்லாம் மாடாய் உழைத்து, பிச்சை எடுத்துக் கால்வயிறு கழுவிக் கொண்டிருந்த கிழவி ஆரோக்கியத்திற்கு முழு வயிறு சோறு போடுகிறாள் அழகம்மாள் இன்று. அவளைத்தான் காணவில்லை.

அழகம்மாள் பைத்தியமாக இருந்த காலத்தில் அடிக்கடி போய் நிற்கும் மாதாகோவில் பாதைக்கு அருகிலுள்ள மணல் திடலுக்கும் கிழவி தேடிச் செல்கிறாள். அங்கே நிலவு வெளிச்சத்தில் கன்னிமோரித்தாய் போல, தெய்வீக அழகாய் நின்றிருந்தாள் அழகம்மாள். "அழகம்மா...." கிழவி அவள் காதருகே குனிந்து மெல்ல அழைத்தாள்.

"அன்று நிலவில் இருந்து தங்கம் போல் ஜொலிக்கும் உடலுடன் தேவன் இறங்கி வந்து தனக்குக் காட்சியளித்தார். அவர் பணமும் காசும் தர முன்வந்தபோது அதை மறுத்து, அவரே வேண்டும்



எனக் கேட்டேன். அவரது நிழல் தன் மீது விழுந்த கணத்தில் உலகமே இருண்டு தன் உடலுக்குள் மட்டும் அளப்பரிய வெளிச்சம் புகுந்தது போன்ற அனுபவத்தைப் பெற்றேன். ஆயா, அந்தத் தேவன் இன்னொரு தடவை வருவாரா?....." எனக் கேட்கிறாள் அழகம்மாள்.

கிழவிக்கு ஒன்றும் புரியவில்லை, 'கிறுக்குக் குட்டி என்னமோ உளறி வழியுது' என்று நினைத்து வீட்டுக்கு அழைத்துப் போகிறாள்.

கடுமையாக உழைத்துவிட்டு வரும் அழகம்மாளை அன்போடு வற்புறுத்தி, ஆரோக்கியம் ஆயா சாப்பாடு ஊட்டுகிறாள். அழகம்மாளும் ஆயாவிற்காக இரண்டு கவளம் சாப்பிடுகிறாள்; ஆனால், அடுத்த கணமே கடுமையான குமட்டல் ஏற்பட்டு, வெளியே ஓடிவந்து வாந்தி எடுக்கிறாள். சில நாட்கள் வேலைக்குப் போக முடியாமல் படுக்கையிலேயே முடங்குகிறாள்.

கொஞ்ச நாட்களுக்குப் பிறகு மீண்டும் வேலைக்குச் செல்லும் அழகம்மாளை, உடன் வேலை செய்யும் பெண்கள் விசித்திரமாகப் பார்க்கிறார்கள். அவளைப் பார்த்ததும் தங்களுக்குள் இரகசியமாகப் பேசி, உருக்கமாகச் சிரிக்கிறார்கள். முன்னைப் போல் வேகமாக வேலை செய்ய முடியாமல் உடல் சோர்வடையும் அழகம்மாள், யாரிடமும் பேசாமல் அமைதியாகிறாள். அன்று இரவும் அவள் ஆரோக்கியம் ஆயாவிடம், "ஆயா, தேவன் வருவாரா?" என்று அதே கேள்வியைக் கேட்கிறாள்.

அழுகையா? சிரிப்பா?

அழகம்மாள் கர்ப்பமாக இருப்பதை உணர்ந்த ஆரோக்கியம் ஆயா, "தேவனாவது, மண்ணாவது! ஏதோ ஒரு பாவிப் பயலால், மானமே போகிறது" என்று தலையில் அடித்துக்கொண்டு ஆத்திரத்துடன் அழுகிறாள். ஆயா கோபமாகப் பேசியதைத் தாங்க முடியாமல் அழகம்மாளும் முகத்தை மூடிக்கொண்டு குழந்தை போல் கதறி அழுகிறாள். அழகம்மாள் அழுவதைக் கண்டு கலங்கிய கிழவிக்கு, பத்து ஆண்டுகளுக்கு முன்பு வீட்டை விட்டு ஓடிப்போன தன் மகள் இசபெல்லாவின் நினைவு வருகிறது. அழகம்மாளைத் தன் சொந்த மகளாகவே பாவிக்கும் கிழவி, அவளை அணைத்து ஆறுதல் கூறிச் சாப்பிட அழைக்கிறாள்.

ஆனால் அழகம்மாளோ, "நீ என் தேவனை



நாசமாகப் போ என்று திட்டினாய், நான் சாப்பிட மாட்டேன்" என்று பிடிவாதம் பிடிக்கிறாள். தான் தெரியாமல் திட்டிவிட்டதாகவும், இனிமேல் தேவனைத் திட்ட மாட்டேன் என்றும் கிழவி கெஞ்சுகிறாள். "தேவன் வருவாரா?" என்று அழகம்மாள் மீண்டும் கேட்க, கிழவியும் "வருவாரு" என்று கூறி, அவளுக்கு ஊறுகாய் வைத்து சாப்பாடு போடுகிறாள். இருவரும் கண்ணீர் வழிய ஒருவரையொருவர் இறுகத் தழுவிக்கொள்ளும் அந்தத் தருணம், அழுகையா அல்லது சிரிப்பா ?

தேவன் வந்த நேரம் – விடையா ? முற்று பெறாத வினாவா?

அழகம்மாளுக்குக் குழந்தை பிறக்கப் போகும் செய்தி ஆரோக்கியத்திற்குத் தொடக்கத்தில் அச்சத்தைத் தந்தாலும், விரைவில் அது பேரானந்தமாக மாறுகிறது. தன் மகள் இசபெல்லாவிற்குப் பிறகு அந்தச் சிறிய குடிசையில் ஒரு குழந்தை தவழப் போகிறது என்ற எண்ணமே கிழவியை மகிழ்ச்சியில் திளைக்க வைக்கிறது. வேலைக்குப் போகாத அழகம்மாளைக் கண்ணுக்குக் கண்ணாகக் காப்பாற்றும் ஆரோக்கியம், தான் பட்டினியாக இருந்தாலும் அவளுக்கு மூன்று வேளையும் வயிறார உணவளிக்கிறாள்; அவளது சுகப்பிரசவத்திற்காகத் தினமும் கர்த்தரிடம் வேண்டுகிறாள். ஊரார் தங்களை ஏளனம் செய்வதைப் பொருட்படுத்தாமல், கிறிஸ்மஸுக்கு இரண்டு நாட்களுக்கு முன்பு அழகம்மாளை அரசு மருத்துவமனையில் சேர்க்கிறாள்.

கிறிஸ்மஸ் நாளன்று அதிகாலையில் அழகம்மாளுக்கு அழகான ஆண் குழந்தை பிறக்கிறது. கண் விழித்துப் பார்க்கும் அழகம்மாளுக்குத் தன் மார்பில் கிடக்கும் குழந்தையைப் பற்றி எதுவும் புரியாமல் திகைக்கிறாள்; ஆனால், அதன் அழுகையைக் கேட்டவுடன் அதைத் தன் மகனாக ஏற்று மார்போடு அணைத்துக் கொள்கிறாள். பக்கத்துப் படுக்கைகளில் இருக்கும் குழந்தைகளுக்குத் தகப்பன்கள் வந்து நலம்பெறுவதைக் காணும் அழகம்மாள், தன் குழந்தைக்கு ஏன் அப்பன் வரவில்லை என்று குழம்புகிறாள். "உன் அப்பாவைக் கூட்டி வருகிறேன்" என்று குழந்தையைக் கட்டிலில் கிடத்திவிட்டு, மருத்துவமனையை விட்டு வெளியேறுகிறாள்.

குழந்தைக்குப் புதுச் சட்டை தைத்துக் கொண்டு மருத்துவமனைக்கு வரும் ஆரோக்கியம், அழகம்மாள் இல்லாததைக் கண்டு அதிர்ச்சியடைகிறாள். உடனே அவள் பேருந்து நிறுத்தத்திற்கு ஓடிச் செல்லும்போது, அங்கு அழகம்மாள் நிற்கும் காட்சியைக் காண்கிறாள். அழகம்மாள் அங்கிருக்கும் ஒவ்வொரு ஆணிடமும் சென்று, "உங்களைத் தேடி என் மகன் அழுகிறான், வாங்க" என்று அவர்களின் கரங்களைப் பிடித்துத் தன் குழந்தைக்குத் தகப்பனாக வருமாறு கெஞ்சுகிறாள். இதைக்கண்டு பதறி ஓடிவரும் ஆரோக்கியம், தான் தைத்து வந்த புதுச் சட்டையைக் காட்டி அவளை அழைக்கிறாள்.

ஆனால் அழகம்மாளோ, "எனக்குச் சட்டை வேண்டாம், என் மகனுக்கு அப்பாதான் வேண்டும்" என்று பிடிவாதம் பிடிக்கிறாள்.

நிலைமையை உணர்ந்த ஆரோக்கியம், "மகளே, உனக்குத் தெரியலியா? முன்னே எல்லாம் நீ சொல்லுவியே 'தேவன்'னு....அந்த தேவன்தான் இப்ப வந்து உன் வயித்திலே மகனாப் பிறந்திருக்கான்.... ஆமாண்டி கண்ணே, இன்னொரு விஷயம் உனக்குத் தெரியுமா... கர்த்தருக்குக் கூட அப்பா கிடையாது.... நீ கவலைப்படாதே மகளே" என்றாள்.

இருப்பினும், அழகம்மாளின் பார்வையோ, உலகத்தில் உள்ள ஒவ்வொரு ஆணுமே தன் குழந்தைக்குத் தகப்பன்தான் என்பது போல, மனிதர்களின் கூட்டத்தில் தன் மகனுக்கான அப்பனைத் தேடி அலைந்து கொண்டே இருக்கிறது.

குழந்தைகள் தின நாள் வாழ்த்துகள்

Protax & Accounting Services
701, Jackson Road, Silver Spring, MD 20904

Online Tax Consultation and Preparation services are available.
Individual • BUSINESS
Non-profit Organization
Please call me at (301) 573 8574 or send an email to peter.yeronimuse@gmail.com

Peter Yeronimuse M.com., EA., CFE.,
Enrolled Agent with Internal Revenue Service & Certified Fraud Examiner

உலகத் தமிழிசைப் பல்கலைக்கழகம்


World Tamil Music University

(தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

IDS
Innovative Dynamic Solutions Global Inc.

ISOME





BABU VINAYAGAM
PRESIDENT

Office:
13800 Coppermine Rd,
Herndon, VA - 20171
www.idsglobalinc.com

Email:
babu@idsglobalinc.com
Work: 703-880-6749
Mobile: 703-939-5465



சங்க இலக்கியச் சொற்பொழிவுகள் நிகழ்வு: சிறப்புப் பார்வை

தொகுப்பு திருமதி புவனேஸ்வரி ராஜேஷ்குமார்

அனைவருக்கும் வணக்கம்!

கடந்த சில இதழ்களில் தொடர்ந்து "வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச் சங்கம்" நிகழ்த்தி வரும் "சங்க இலக்கியச் சொற்பொழிவுகள்" என்ற தலைப்பில் இணைய வழி வாயிலாக சங்க இலக்கியக் காலத்தை நமக்கு நினைவுப் படுத்தி நமது காலத்தைக் கடந்த உணர்வை நமக்குக் கொடுத்தது. அதைத் தொடர்ந்து ஜூலை 26ஆம் தேதி அன்று மதுரையா? காஞ்சியா? என்ற தலைப்பில் பேராசிரியர் திருமதி சுப்புலஷ்மி முத்துக்குமார் அவர்களின் சிறப்புரை சிறப்பாக அமைந்திருந்தது. "தமிழர்களின் ஆட்சிச் சிறப்பு, அமைதி வளர்ச்சி, வணிக மேன்மை" என அனைத்திற்கும் சான்றாகத் திகழ்பவை மதுரையும் காஞ்சியும் ஆகும். இவ்விரு நகரங்களின் பெருமையையும் சிறப்பாக நமக்கு எடுத்துரைத்தார்.



அதனைத் தொடர்ந்து ஆகஸ்ட் 30, 2026 அன்று "சிறுபாணாற்றுப்படை அறிமுகம்" என்ற தலைப்பில் பேராசிரியர் முனைவர் கி.ஜே. சுந்தர் சிறப்புரை யாற்றினார். பத்துப்பாட்டு நூல்களுள் சிறுபாணாற்றுப் படை நைவளமிக்க ஒரு புறநூல் ஆகும். சிறிய யாழை மீட்டும் பாணனை, கொடைவள்ளலான நல்லியக் கோடனை வழிநடத்துவதால் இப்பெயர் பெற்றது. இந்நூலின் சிறப்பை நமது பேராசிரியர் சிறப்பாக உரையாற்றினார்.

அதனைத் தொடர்ந்து செப்டம்பர் 27, 2026 அன்று "பொருநராற்றுப்படை அறிமுகம்" என்ற தலைப்பில் திருமதி ஜெயமாறன் சிறப்புரையாற்றினார். பொருநராற்றுப்படை போர்க்களப் பாடகர்களான 'பொருநரை' மையமாகக் கொண்டு அமைந்த ஒரு புறப்பொருள் நூலாகும். கரிகாலனின் வீரத்தையும் கொடைத்தன்மையையும் இந்நூல் நமக்குச் சிறப்பாக எடுத்துரைக்கிறது.

இத்தகைய தெவிட்டாத தேன் தமிழாம் நம் தமிழ்மொழியின் சிறப்பையும், பழந்தமிழர் சிறப்பையும் நமக்கு நம் கண்முன்னே கொண்டுவரும் இச்சங்க கால இலக்கியச் சொற்பொழிவை அனைவருக்கும் எளிதாகக் கொண்டு சேர்க்கும் நமது தமிழ்ச் சங்கத்தின் முயற்சியைப் பாராட்டுவதுடன், இந்த வாய்ப்பை அனைவரும் பயன்படுத்திப் பயன்பெற வேண்டிக் கொள்கிறேன்.நன்றி வணக்கம்!

பாலாவின் குறுங் கவிதைகள்



பிறப்பிலிருந்து இறப்பு வரை
வாழ்வில் இருக்கத்தான் செய்கிறது
தேடல்.

***

சந்தி..
சிரித்தது
ஒற்றுப் பிழையோடு சொற்கள்.

***

பணக்காரத்தனத்திலும்
வறுமை தெரிந்தது
நாகரீகம் எனும் பெயரில் நலிந்த உடை.



பெண்மை... பெருமை....



திருமதி இராஜம் கிருஷ்ணன்

தமிழ் இலக்கியத்தில் பெண்களின் வாழ்க்கையையும், உழைக்கும் மக்களின் போராட்டங்களையும் சமூக அக்கறையுடன் பதிவு செய்த முக்கியமான பெண் எழுத்தாளர்களில் ஒருவர் இராஜம் கிருஷ்ணன். 1925ஆம் ஆண்டு திருச்சி மாவட்டம் முசிறியில் பிறந்த இவர், 1940களிலேயே எழுதத் தொடங்கி, பல தசாப்தங்களாகத் தமிழிலக்கியத்தில் தனக்கென ஒரு தனித்துவமான இடத்தை உருவாக்கினார்.

இராஜம் கிருஷ்ணனின் எழுத்தின் முக்கியமான சிறப்பு, அவர் வெறுமனே கற்பனையில் கதைகளை உருவாக்கவில்லை என்பதுதான். தான் எழுதப்போகும் மக்களின் வாழ்க்கைச் சூழலுக்கே சென்று, அவர்களுடன் உரையாடி, அவர்களின் வாழ்வியல் பிரச்சினைகளை நேரடியாக அறிந்து, பின்னர் அவற்றைத் தனது படைப்புகளில் பதிவு செய்தார். மலைவாழ் மக்கள், மீனவர்கள், உப்பளத் தொழிலாளர்கள், விவசாயிகள், குழந்தைத் தொழிலாளர்கள் மற்றும் உழைக்கும் பெண்கள் என அவரது படைப்புகளின் களம் மிகவும் விரிவானது.



திருமதி இரஹ்மீமா அலாவுதீன்


பெண்களின் வாழ்க்கை, அவர்களின் கனவுகள், குடும்பம் மற்றும் சமூகத்தில் அவர்கள் எதிர்கொள்ளும் கட்டுப்பாடுகள் ஆகியவை இராஜம் கிருஷ்ணனின் எழுத்தில் முக்கிய இடம் பெற்றன. குறிப்பாக, சமூகத்தின் விளிம்புநிலையில் வாழும் பெண்களின் வாழ்க்கையை அவர் வெறும் இரக்கத்துடன் மட்டும் அணுகவில்லை; அவர்களின் குரல், போராட்டம், தன்னம்பிக்கை மற்றும் உரிமை உணர்வு ஆகியவற்றையும் தனது கதாபாத்திரங்களின் வழியாக வெளிப்படுத்தினார். அவரது ஆரம்பகால முக்கியமான படைப்புகளில் ஒன்றான 'பெண் குரல்', கூட்டுக் குடும்பச் சூழலில் ஒரு பெண் எதிர்கொள்ளும் பிரச்சினைகளையும், அவற்றிலிருந்து அவள் எவ்வாறு மீண்டு வருகிறாள் என்பதையும் எடுத்துரைக்கிறது. பெண்களின் வாழ்க்கையை குடும்பக் கதைகளாக மட்டும் பார்க்காமல், அதன் பின்னணியில் இருக்கும் சமூக அமைப்புகளையும் அவர் ஆராய்ந்தார்.

இராஜம் கிருஷ்ணனின் படைப்புகளில் கிராமப்புற மக்களின் வாழ்வும் உழைக்கும் வர்க்கத்தின் போராட்டங்களும் முக்கிய இடம் பெற்றன. 'சேற்றில்

மனிதர்கள்' விவசாயிகளின் வாழ்க்கைப் போராட்டத்தைப் பதிவு செய்தது. 'கரிப்பு மணிகள்' உப்பளத் தொழிலாளர்களின் கடினமான வாழ்க்கையை மையமாகக் கொண்டது. இத்தகைய படைப்புகள் மூலம், நம் அன்றாட வாழ்க்கையில் சாதாரணமாகத் தோன்றும் பொருட்களின் பின்னால் உழைக்கும் மக்களின் வியர்வையும் துயரமும் இருப்பதை வாசகர்களுக்கு உணர்த்தினார்.

குறிப்பாக, 'கரிப்பு மணிகள்' படைப்பிற்காக உப்பளத் தொழிலாளர்களின் வாழ்க்கையை நேரடியாக அறிந்து கொள்ள அவர்கள் ஆய்வு மேற்கொண்டதாகப் பல ஆதாரங்கள் குறிப்பிடுகின்றன. அவரது எழுத்தில் காணப்படும் எதார்த்தத் தன்மைக்கு இந்த நேரடி அனுபவங்களே முக்கிய காரணமாக அமைந்தன.

இராஜம் கிருஷ்ணனின் கதாபாத்திரங்கள் பெரும்பாலும் நம்மைச் சுற்றி வாழும் சாதாரண மனிதர்கள். பெரிய நகரங்களின் வாழ்க்கையை மட்டும் மையப்படுத்தாமல், கிராமங்களிலும் தொழிலிடங்களிலும் வாழும் மக்களின் அன்றாடப் போராட்டங்களை அவர் இலக்கியத்தின் மையத்திற்குக் கொண்டு வந்தார்.



மலைப்பகுதி மக்கள், மீனவப் பெண்கள், விவசாயக் குடும்பங்கள், உப்பளத் தொழிலாளர்கள், குழந்தைத் தொழிலாளர்கள் என சமூகத்தின் பல்வேறு அடுக்குகளை அவரது எழுத்து பிரதிபலித்தது. இதனால் அவரது படைப்புகள் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தின் சமூக வரலாற்றைப் பதிவு செய்யும் ஆவணங்களாகவும் பார்க்கப்படுகின்றன.

இராஜம் கிருஷ்ணனின் எழுத்தில் காணப்படும் மற்றொரு தனிச்சிறப்பு அவரது ஆய்வு மனப்பான்மை. ஒரு கதைக்கருவைத் தேர்ந்தெடுத்த பிறகு, அதற்கான சமூகச் சூழலைப் புரிந்துகொள்ள அவர் நேரடியாக அந்த இடங்களுக்குச் சென்று மக்களைச் சந்தித்தார். அதனால் அவரது கதைகளில் கதாபாத்திரங்களின் வாழ்க்கை இயல்பாகவும் நம்பகத்தன்மையுடனும் வெளிப்பட்டது.

நாற்பதுக்கும் மேற்பட்ட நாவல்கள், சிறுகதைகள், நாடகங்கள், வாழ்க்கை வரலாறுகள், கட்டுரைகள் மற்றும் மொழிபெயர்ப்புகள் என அவரது இலக்கியப் பங்களிப்பு பரந்தது. மலையாள இலக்கியங்களையும் தமிழில் மொழிபெயர்த்துள்ளார்.

அவரது இலக்கியப் பங்களிப்புக்காக பல்வேறு விருதுகள் அவரைத் தேடி வந்தன. 'வேருக்கு நீர்' நாவலுக்காக 1973ஆம் ஆண்டு சாகித்ய அகாதமி விருது பெற்றார். மேலும் பல இலக்கிய விருதுகளும் அவருக்கு வழங்கப்பட்டுள்ளன.

2014ஆம் ஆண்டு அக்டோபர் 20ஆம் தேதி இராஜம் கிருஷ்ணன் மறைந்தார். ஆனால் அவர் எழுதிய பெண்களின் வாழ்க்கையும், உழைக்கும் மக்களின் போராட்டங்களும், சமூக அநீதிகளுக்கு எதிரான அவரது கேள்விகளும் இன்றும் வாசகர்களிடம் தொடர்ந்து பேசுகின்றன.

இராஜம் கிருஷ்ணன் வெறும் கதைசொல்லி அல்ல; சமூகத்தின் கண்ணுக்குப் புலப்படாத மனிதர்களின் வாழ்க்கையை இலக்கியத்தின் வெளிச்சத்திற்குக் கொண்டு வந்த எழுத்தாளர். குறிப்பாக கிராமப்புறப் பெண்கள், உழைக்கும் பெண்கள் மற்றும் அடித்தட்டு மக்களின் வாழ்க்கையை அவர்களின் வலியுடனும் நம்பிக்கையுடனும் பதிவு செய்தவர்.

அவரது எழுத்து நமக்கு ஒரு முக்கியமான உண்மையை நினைவூட்டுகிறது: இலக்கியம் என்பது பொழுதுபோக்கு மட்டுமல்ல; சமூகத்தைப் புரிந்துகொள்ளவும், மறைக்கப்பட்ட குரல்களைக் கேட்கவும் உதவும் ஒரு சக்தி.

இராஜம் கிருஷ்ணனின் படைப்புகள் அந்தக் குரல்களுக்கு ஒரு நிலையான இடத்தைத் தமிழிலக்கியத்தில் உருவாக்கியுள்ளன.

சமீபத்திய திரைப்படங்கள்:
ஒரு சிறப்புப்பார்வை



நூறு சாமி திரைப்படம் போல நூறு படங்கள் வந்தால் கூட இந்த சமுதாயத்திற்குத் தேவையான விழிப்புணர்வு என்பது நிச்சயமான உண்மை. ஒரு தாய், "மறுபடியும் திருமணம் செய்துகொள்ளலாம் என்று நினைக்கிறேன்" என்று சாதாரணமாகக் குறிப்பிடுகிறார். ஆனால், அவரது இரண்டு வளர்ந்த மகன்களும், அவர் ஏதோ ஒரு குற்றத்தை ஒப்புக்கொண்டு விட்டதைப் போல அதிர்ச்சி அடைகிறார்கள். அந்தச் சிறிய, சங்கடமான, நியாயமான ஆசையே நூறு சாமி படத்தின் மையப்புள்ளி. அந்த ஆசையை முதலில் ஏற்றுக்கொள்ள முடியாமல் தவிக்கும் மகன்கள், பின்னர் தங்களது தாயின் நியாயமான, உண்மையான உணர்வுகளுக்கு மதிப்பளித்து தன் அம்மாவிற்கு ஏற்ற மணமகன்களின் பட்டியலைத் தயாரிக்கும் நிலைக்கு எப்படி பயணிக்கிறார்கள் என்பதில்தான் படத்தின் உண்மையான சுவாரஸ்யம் இருக்கிறது.



திருமதி மோனிகா ஜெரால்டு

பிச்சைக்காரன் படத்திற்குப் பிறகு கிட்டத்தட்ட பத்து ஆண்டுகளுக்குப் பின்னர் இயக்குனர் சசி, விஜய் ஆண்டனியுடன் மீண்டும் இணைந்திருக்கிறார். தனது இரண்டு மகன்களான பாஸ்கர், விவேக் ஆகியோரைத் தனியாக வளர்த்த செல்வியைச் சுற்றியே அவர் கதையை அமைத்திருக்கிறார். இருவரும் வளர்ந்து, தங்களுக்கென தனித்தனி வாழ்க்கைகளில் சிதறிச் செல்கிறார்கள். அவர்களில் ஒருவர் ஆசிரியராகப் பணி புரிகிறார். தனது மறுமண ஆசையை செல்வி வெளிப்படுத்தியதும், பாஸ்கரின் முதல் எதிர்வினை எதிர்ப்பாகவே இருக்கிறது. அதற்கு அவர்கள் வளர்ந்த சூழல் கூட ஒரு காரணமாய் அமைந்து விடுகிறது.

இந்தக் குடும்பம், தனது அவமானங்களையும் பெருமையுடன் சுமந்து திரியும் ஒரு கிராமத்தின் மத்தியில் இருக்கிறது. தன்னைப் பற்றிய பிறரது கருத்தை பிடிவாதமாகக் காப்பாற்றிக் கொண்டு, தங்களுக்குள் இருப்பவர்களையே கண்காணிப்பதில் தீவிரமாக இருக்கும் சமூகச் சூழல்தான் அது. இங்குதான் போராட்டம் இரண்டு கட்டங்களாக நகர்கிறது. முதலில் மறுத்து, எதிர்க்கும் சகோதரர்கள் பிறகு தங்களது ஈகோவைத் தாழ்த்தி, தாய்க்கு ஒரு துணையைத் தேடித் தருவது தங்களது தனிப்பட்ட பெருமையைவிட முக்கியமானது


என்பதை ஏற்றுக்கொள்கிறார்கள். அடுத்ததாக, தாங்கள் நினைத்ததை நடைமுறைப்படுத்துவதுதான் இன்னும் கடினமானதாக இருக்கிறது . எதற்கும் கோபப்படத் தயாராக இருக்கும் அக்கம்பக்கத்தினர் மற்றும் அவர் தாயின் குடும்பத்தினரின் எதிர்ப்பைத் தாண்டி இதைச் செய்ய வேண்டியிருக்கிறது. விஷயங்கள் ஓரளவு அமைதியாகும்போதெல்லாம் குழப்பத்தை கிளப்புவதில் ஆர்வமாக இருக்கும் பச்சைப்பெருமாள் இந்தப் பிரச்சினையில் மேலும் எண்ணெய் ஊற்றுகிறார்.

இப்படிப்பட்ட கிராமத்து கதைக்களங்களை நாம் ஆயிரம் முறை பார்த்திருக்கிறோம். ஆனால், இயக்குனர் சசி பெரும்பாலும் எதிர்பார்க்கப்படும் வழிகளில் செல்லாமல் இருப்பதுதான் இங்கே ஆச்சரியம் மற்றும் ஆறுதல். கதறல் இல்லை, பழிவாங்குதல் இல்லை, இதுபோன்ற கதைகள் அடிக்கடி சென்று முடியும் ஆணவக் கொலை போன்ற அதிரடி வன்முறையும் இல்லை. ஓரிரு தருணங்களில் அந்தத் திசையை நோக்கி படம் நகர்வது போலத் தோன்றுகிறது. குறிப்பாக செல்வியின் சகோதரர் தன் சகோதரியைக் கொல்ல முயற்சிக்கும் தருணம் அதிர்ச்சி . ஆனால் படம் மீண்டும் தன்னைச் சமநிலைப்படுத்திக் கொள்கிறது.

படத்தின் மொத்த மனநிலை, கோபத்துடன் கூடிய நகைச்சுவை உணர்வுக்கு நெருக்கமானது. கிட்டத்தட்ட எல்லோருமே எளிதில் கோபப்படுபவர்கள்; சிறிய விஷயத்திற்குக்கூட உடனே எரிச்சலடைந்து, அதைவிட வேகமாக வாக்குவாதத்தில் இறங்குகிறார்கள். இருந்தாலும் அந்த எரிச்சல் ஒருபோதும் எரிச்சலூட்டும் அளவுக்கு மிகையாக மாறவில்லை. திருமணப் பேச்சுவார்த்தைகளைக்கூட தங்களது *YouTube* சேனலுக்கான உள்ளடக்கமாக மாற்றிக் கொள்ளும் ஒரு *YouTuber* குடும்பத்தைச் சுற்றியுள்ள துணைக் கதையும் இருக்கிறது. வழக்கமாக எரிச்சலூட்டும் சமூக ஊடக நகைச்சுவையைப் போலத்தான் தோன்றுகிறது. ஆனால், இங்கே அது நன்றாகவே வேலை செய்கிறது. குறிப்பாக இறுதியில் வரும் ஒரு திருப்பத்திற்கும் அது வழிவகுக்கிறது. அந்தத் திருப்பம் சற்றே ஆபத்தானது, கொஞ்சம் வேடிக்கையாகவும் இருக்கிறது; இருந்தாலும் எப்படியோ அது நன்றாகப் பொருந்துகிறது.

கதாநாயகி ஸ்வஸிகாதான் படத்தின் பெரும்பகுதியைத் தாங்கிச் செல்கிறார். அவரது கதாபாத்திரம் முழுவதும் விரக்தி, உணர்வுகளின் அடக்குமுறை , எப்போதும் முகத்தில் தெரியும் ஒரு சிறிய கோபம். ஆனால் அந்தக் கோபத்தின் அடியில் கொதித்துக்கொண்டிருக்கும் உணர்வுகளையும் அவர் அற்புதமாக வெளிப்படுத்து கிறார்.விஜய் ஆண்டனி படத்தின் இறுதிப் பகுதியில் தான் முறையாக வருகிறார். கரும்புத் தொழிலாளியான ஏழுமலை என்ற கதாபாத்திரத்தில், சுற்றியிருக்கும் குழப்பங்கள் எதுவும் தன்னைப் பாதிக்காதது போல அவர் அமைதியாக இருக்கிறார். கதாபாத்திரம் எளிமையானதுதான். ஆனால் அவரது நடிப்பில் உண்மையான உயிரோட்டம் தெரிகிறது.தனது வாழ்க்கையை மாற்றிக்கொள்ள வேண்டிய சூழ்நிலையில் சிக்கிக்கொள்ளும், உணர்ச்சிவசப்பட்ட மகனாக அஜய் திஷன் நன்றாக நடித்திருக்கிறார். அதேபோல், பிரச்சினைகளைத் தூண்டிவிடும் பச்சைப்பெருமாள் கதாபாத்திரத்தை பாலாஜி சக்திவேல் இரசித்து நடித்திருக்கிறார்.

இந்தத் திரைப்படத்திற்கு பெரிய காட்சிகளையோ பிரம்மாண்டமான பின்னணியையோ காட்ட வேண்டிய அவசியம் இல்லை. அந்தச் சிறிய கதைக்குள் கிடைக்கக்கூடிய அளவுக்கு சசி முழுமையாகப் பயன்படுத்திக்கொள்கிறார். அதுவும் ஒரு பெண்ணின் சுதந்திரம் குறித்து நீண்ட பிரசங்கம் எதையும் செய்யாமல் படத்தின் கருத்து நம்மைச் சென்றடைகிறது.



Global Alliant
"Deliver IT Right"

GLOBAL ALLIANT

http://www.globalalliant.com

Complimentary Printing Services By

Minuteman Press. Sterling VA
WE DESIGN, PRINT & PROMOTE...YOU!

(571) 375-7010
va224.minuteman.com
va224@minutemanpress.com
202 Lane Court, Ste B Sterling, VA 20166

ELEVATE YOUR BRAND WITH OUR PRINTING SOLUTIONS

தமிழ்ப் பெண்கள் நடத்தும் நிறுவனம்

DESIGN • PRINTING
MAILINGS • APPAREL • SIGNAGE

Our Products & Services

- Advertising Strategies
- Binders & Tabs
- Brand Identity & Door Hangers
- Brochures & Letterheads
- Business Cards
- Calendars & Planners
- Catalogs & Rack Cards
- Creative Design
- Custom Bags & Boxes
- Custom Branded Apparel
- Custom Checks & Tickets
- Direct Mail/EDDM
- Envelopes & Stationery
- Finishing Solutions
- Flyers & Pens
- Forms & Carbonless
- Posters
- Variable Data
- Labels & Stickers
- Large Format, Banners
- Menus & Table Tents
- Plaques & Awards
- Postcards & Signage
- Presentation Folders
- Promotional Products
- Greeting Cards & Invitations
- Mailing & Marketing Services
- On-Demand Digital Printing





250+
Arangetrams

75+
Weddings

Honored with

LIFETIME ACHIEVEMENT IN CULTURAL PHOTOGRAPHY AWARD

from the U.S. India SME Council, Inc.

Celebrity Concerts Corporate Events

Serving Washington DC Metro Area and Beyond, U.S.A.

Siva Sottallu PHOTOGRAPHY

Photos, Videos & More









We extend **our warmest wishes** to one and all on this

special occasion



+1 443-878-5116

siva.sottallu@gmail.com

SivaSottalluPhotography.com

@SivaSottallu